விஷ்வவாணி சமர்ப்பண்

Rs. 10/- | Vol. 36 - Issue 3 | March 2023

கர்த்தரின் வசனம்

மன்னா

விஷ்வவாணி சமர்ப்பண்
March 2023

பதிப்பு அலுவலகம்
1-10-28/247, ஆனந்தபுரம், குஷாய்குடா,
E.C.I.L. P.O, ஹைதராபாத் - 500062
✆040-27125557.
E-mail: samarpan@vishwavani.org
நிர்வாக அலுவலகம்
20, ராகுல் தெரு, TMP நகர், புதூர்,
அம்பத்தூர், சென்னை – 600053
✆044-26869200
E-mail: vishwavaninet@vishwavani.org

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஒரியா, பெங்காலி, ஆங்கிலம், காக்பொராக், சோரா ஆகிய 12 மொழிகளில் பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது. ஆண்டு சந்தா ரூ. 100/-.

பருகப்போவது

2 சிந்தனைக்கு
3 நிர்வாக இயக்குநரிடமிருந்து
7 சிறப்புக் கட்டுரை
11 ஓர் பிரார்த்தனை
12 சின்னச் சின்ன உணர்வுகள்
18 அன்பின் பகிர்வுகள்
21 ஜெப ஒருங்கிணைப்பு இயக்குநர் கடிதம்
24 பணித்தளச் செய்திகள்
34 நடப்புச்செய்திகள்

எமில் அண்ணனின்

சிந்தனை வரிகள்

- கர்த்தருடைய வசனத்தை
  பருகவேண்டிய நேரம்
  அதிகாலை நேரம்;
  பிந்தப் பிந்த மன்னா மறையும்,
  முந்த முந்த மன்னா கிடைக்கும்!
- அதிகாலையின் மன்னாவைப்
  பொறுக்காமல்
  இதயத்தின் தூசிகளைப் பெருக்க
  துடைப்பங்களே இல்லை!
- மன்னா உள்ளே செல்லச் செல்ல
  பாவக் கிருமிகள் சாகடிக்கப்படும்,
  செல்லாவிட்டால் உள்ளம்
  புழுப்புழுக்கும்!
- வேத வசனங்களை ஆராய்ந்து
  பார்த்தால் நித்திய ஜீவன்,
  தவறினால் நித்திய அழிவு!
- கர்த்தருடைய ஊழியக்காரன்
  மன்னாவை பருகவேண்டும்,
  பிட்டுக் கொடுக்கவேண்டும்;
  அவன் மறுபெயர் எஸ்றா!
- ஆத்தும பசியைத் தீர்ப்பது
  கர்த்தருடைய வசனமே,
  தீர்க்கப்படாத வரை
  பட்டினி உணர்வே!
- காலையில்
  கர்த்தருடைய வசனத்தை
  வாசிக்காதவர்கள்
  பகலில்
  வெற்றிகளை வாசிப்பதே இல்லை!

வானத்து மன்னாவினாலே அநுதினமும் திருப்தியாக போஷிக்கப்படும் உங்களுக்கு

நிர்வாக இயக்குநரின் அஞ்சல்

தமது மிகுந்த மன உருக்கத்தின்படியே நம்மை ஒன்றிலும் குறைவுபடாதபடிக்கு வழிநடத்திவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.

பிரியமானவர்களே, 2022-2023ம் நிதியாண்டின் நிறைவு மாதத்தில் வந்து நிற்கிறோம். இந்நிதியாண்டின் பதினோரு மாதங்களும் நம்மை போஷித்து, காப்பாற்றி, ஊழியத்தில் பெருக்கமான ஆத்தும அறுவடையைத் தந்து, வழிநடத்தி வந்த நமது தேவாதி தேவனை நன்றியுடன் ஸ்தோத்திரிப்போமாக. பணிப் பங்காளர்களாகிய நீங்களும் மிகுந்த ஊக்கமாய் ஜெபித்தீர்கள், உதாரத்துவமாய்க் கொடுத்தீர்கள், உண்மையாய் உழைத்தீர்கள் என்பதை நினைவுகூர்ந்து நன்றி செலுத்துகிறோம். மார்ச் 31க்குள் செய்து நிறைவேற்றவேண்டிய பணித்திட்டங்களை செய்துமுடிக்க மறவாமல் ஜெபியுங்கள், உங்கள் பங்களிப்பையும் தயவுகூர்ந்து நிறைவேற்றுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

மன்னா: ஜீவ ஆகாரமாகிய இயேசு கிறிஸ்து:

கர்த்தருடைய இரக்கங்கள் மகா பெரியவைகள்! கர்த்தர் வனாந்தரத்திலே 'மன்னாவை' வருஷிக்கப்பண்ணி, தூதர்கள் சாப்பிடும் அப்பத்தை தமது ஜனங்களுக்கு ஆகாரமாகக் கொடுத்தார் (சங். 78:24,25). அத்துடன் அவர்களை ஆகாரத்தால் 'திருப்திபடுத்தி' வழிநடத்தினார் என்று சங்கீதம் 105:40ல் குறிப்பிடப் பட்டுள்ளது. இப்படியே, கர்த்தர் தமது ஜனங்களைக் கைவிடாமல், பசிக்கு மன்னாவையும், தாகத்திற்குக் கன்மலையின் தண்ணீரையும் தந்து, பகலில் மேக ஸ்தம்பம், இரவில் அக்கினி ஸ்தம்பம் காட்டி, முன்சென்று வழிநடத்தினார் என்றும் அவர்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகப்பண்ணினார் என்றும் நெகேமியா 9:19-23ல் வாசிக்க இயலும். இஸ்ரவேலர் வனாந்தரத்திலே பசியாறின அந்த மன்னாவைவிட "இயேசு கிறிஸ்துவே" மேன்மையான நித்திய மன்னா என்பதை யோவான் 6:31, 49-58ல் குறிப்பிடுகிறார். வனாந்தர மன்னா 'அழியும்' தன்மையுள்ளது, வானத்து மன்னா 'நித்திய' தன்மையுடையது!

மறைவான மன்னா:

வெளிப்படுத்தின விசேஷம் 2:17ல் குறிப்பிடப்பட்டுள்ள 'மறைவான மன்னா' என்பதும் இயேசு கிறிஸ்துவையே குறிக்கும் என்பதை இயேசுதாமே சுட்டிக்காட்டியுள்ளதை யோவான் 6:32-35, 51-58ல் நாம் வாசிக்கிறோம். வனாந்தரத்திலே வருஷிக்கப் பட்ட மன்னா (யாத். 16:4) ஜனங்களை சரீரப்பிரகாரமாக போஷிக்க வழங்கப்பட்டது. ஆனால் அது மீண்டும் மீண்டும் பசியை கொழுந்துவிட்டு எரியச்செய்தது; வெறுமை, வெற்றிடத்தை தந்தது; தனிமை, ஓய்வின்மையைக் கொடுத்தது; முறுமுறுப்பையும் எதிர்மறையான செயல்பாடுகளைச் செய்யவுமே நடத்தியது!

ஆனால், ஆவிக்குரிய 'மறைவான மன்னாவாகிய' இயேசு கிறிஸ்து வார்த்தையாக இறங்கி வந்ததில் நித்திய நோக்கமும், முக்கியத்துவமும் இருந்ததாக யோவான் 6:57,58 தெரிவிக்கிறது. இந்த 'மறைவான மன்னாவாகிய கிறிஸ்துவை' புசிக்கிறவன் நித்திய ஜீவனைப் பெறுவான் என்பதாக அறிகிறோம். உலகப் பிரகாரமான மக்களுக்கு இந்த 'மறைவான மன்னா' கண்களுக்குத் தெரிவதில்லை;

அவர்கள் அந்த மன்னாவால் பசி போக்கப்படுவதும் இல்லை; காரணம், அவர்கள் இன்னும் 'பாவத்திலேயே' ஜீவிப்பதால்!

ஆவிக்குரியவர்கள் எவர்களோ, அவர்களே 'காண இயலாதவரை' இயேசுவில் காண இயலும். பரிசுத்த வேத எழுத்துக்களை அநுதினமும் தியானிக்கும்போது ஆத்துமப் பசியாறமுடியும்! புதுபெலன் பெற்றும், திருப்தியடைந்தும் நித்தியக்காலமாய் வாழுவார்கள் (நெகே. 9:15; யோவான் 3:16; 6:51). ஜெயங்கொள்ளும் எவருக்கும் இந்த 'மறைவான மன்னாவாகிய இயேசு' வாக்களிக்கப்படுகிறார் (வெளி. 2:17). மேலும், நித்திய ஜீவகால பரியந்தம் அவரது 'பிரசன்னத்தை தரிசிக்கும் பாக்கியம்' பெரும் சிலாக்கியமாகத் தரப்படுவது இரண்டாம் வாக்குத்தத்தம் என்பதை அறிந்து, அதற்கு நாம் ஆயத்தமாவதுடன், மற்றோரை ஆயத்தப்படுத்துவதும் அதிமுக்கியம்!

மறைவான மன்னாவைப் பெற இயலாமையின் தடைகள் என்ன?

என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று இயேசுதாமே வாக்கருளினார் (யோவான் 6:37). அவனுக்கு நித்திய ஜீவனும் உயிர்த்தெழுதலும் உண்டு (வசனம் 40). அப்படியானால் என்னில் காணும் தடை என்ன?

1. உலக சிந்தனையும், தற்காலிக நோக்கமும் (யோவான் 6:26,27,34)
2. அவிசுவாசம் (யோவான் 6:36; 7:5)
3. முறுமுறுப்பு (யோவான் 6: 41-43, 61; 7:12)
4. தகுதியை அல்ல, கிருபையே என்பதை உணராமை (யோவான் 6:44, 65; 12:32)
5. கடின இருதயம் (யோவான் 6: 60-64, 66)

இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து: உங்களுக்கும் இந்த 'மறைவான மன்னாவைப்' பெற விருப்பம் இல்லையோ என்று வினவினார். ஆனால், பேதுரு, "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், 'நித்திய ஜீவ வசனங்கள்' உம்மிடத்தில் உண்டே" (யோவான் 6:67-69) என்று அறிக்கையிட்டதுபோல, நீங்களும் அறிக்கையிட்டு ஒப்புக்கொடுங்கள்.

தேசீய முகாம் 2023:

ஜனவரி 14-16 வரை ஹைதராபாத்தில் இடம்பெற்ற தேசீய முகாமில் 1,054 பேர் பங்கேற்றனர். மாற்கு 1:38ஐ மையம்கொண்டு, இயேசுவை அறியாத இந்தியக் கிராமங்கள் குறித்து சிந்திக்கவும், 6,000 புதிய கிராமங்களைச் சுவிசேஷமயமாக்கத் திட்டமிடவும், 1,200 புதிய ஊழியர்கள் மூலம் அதை செயல்படுத்தவும் பாரத்துடன் ஜெபித்தோம்; சுதந்தரிக்கப் புறப்பட்டுச் சென்றோம்! பன்மொழிப் பாடல்கள், கலாச்சார நிகழ்வுகள், பணித்தளப் பகிர்வுகள், சந்தியா ஜெப நேரங்கள், நற்செய்திப் பணிக்கென சிறப்பு ஈகையளிக்கும் நேரம் மற்றும் கருத்தாழம்மிக்க "அடுத்த ஊர் செல்லவேண்டும்'' என்று உத்வேகப்படுத்திய தரிசனச் செய்திகள் யாவும் ஆசீர்வாதமாய் அமைந்தது! உகந்த கால சூழ்நிலைகள், உணவு, தங்குமிடம் தந்து, முகாமின் தேவைகளைச் சந்தித்த தேவனைத் துதிக்கிறோம்.

புதிய எஸ்றாக்களுக்குப் பயிற்சி:

நமது தரிசனத் திட்டப்படி, முழுநேரப் பணிக்கு ஊழியர்களைப் பயிற்றுவித்து, இயேசுவை அறியாத கிராமங்களுக்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறோம். தற்போது 25 புதிய எஸ்றாக்கள் குஜராத் – நவபாடா பயிற்சி நிலையத்தில் பட்டை தீட்டப்படுகிறார்கள்; ஏப்ரல் மாதம்முதல் சுமார் 100 கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷ தீபமேற்ற ஆயத்தப் படுகிறார்கள். கிராமம் ஒன்றின் ஊழியத்திற்கு மாதம் ரூ. 4000/– வீதம் இப்புதிய ஊழியக் கிராமங்களைப் பொறுப்பெடுக்கத் தேவப்பிள்ளைகள் தேவை. தனிநபராக, குடும்பமாக, சபையாக, ஜெபக்குழுக்களாக நீங்களும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து அல்லது தங்களால் இயன்றதைக் கொடுத்து, கிராம ஊழியங்களைத் தாங்கலாமே! வாருங்கள், சுவிசேஷம் எட்டியிராத அடுத்தடுத்த கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றிட!

மார்ச் 31ல் நிறைவடையும் இந்நிதியாண்டு:

பணியின் பங்காளர்களே, தயவுகூர்ந்து தங்கள் சேமிப்புப் பெட்டி ஈகை, கிராமத் தத்தெடுப்பு மாதாந்திர காணிக்கைகளை உற்சாகமாகக் கொடுத்து, இரசீது பெற்றுக்கொள்ளும்படி பட்சமாய் வேண்டுகிறோம். இலவச தொலைபேசி தொடர்பு எண் (Tollfree) 1800 2700 333ஐ தொடர்புகொண்டு ஜெபிக்கவும், காணிக்கைகள் செலுத்துதல் மற்றும் பணி விபரங்களை அறிந்துகொள்ளவும் நினைப்பூட்டுகிறோம். விஷ்வவாணி ஊழியர் குடும்பங்களின் நலனில் ஆர்வமுள்ளோர் தங்கள் கருணை தொகைதனை வழங்கிட (SFCAN) 9444 455 646 என்ற அலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம். வட இந்தியப் பணித்தளங்களைப் பார்வையிட விரும்புவோர் உங்கள் வட்டார ஊழியர்கள், பிரதிநிதிகளை அணுகும்படி கேட்கிறோம்; மேலும் சிறப்பு நன்கொடைகளையும் உங்களிடமிருந்து வரவேற்கிறோம்.

பணித்தள ஆலயங்களில் அருட்பணி சிறப்பு விழாக்கள் :

நமது வடஇந்திய பணித்தளங்களில் எழும்பியிருக்கும் முதல் தலைமுறை விசுவாசிகள் பிப்ரவரி 19முதல் மார்ச் 12வரை இடம்பெறவுள்ள ‘அருட்பணி சிறப்பு நிகழ்வு’களுக்காக ஆயத்தப்படுகின்றனர். சிறுவர், வாலிபர், பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கான எழுப்புதல் கூடுகைகள், ஜெப நேரங்கள் என்று ஞாயிறுதோறும் இடம்பெறவுள்ள இச்சிறப்பு நிகழ்வுகளுக்காக ஜெபியுங்கள். கிறிஸ்துவில் தாங்கள் பெற்ற ‘இரட்சிப்பின் சந்தோஷத்தை’ மற்ற கிராம மக்களும் பெறவேண்டுமென்ற குறிக்கோளுடன் ‘நாங்களும் ஜெபிப்போம், உதாரத்துவமாய் கரங்கொடுப்போம், சுவிசேஷம் சுமப்போம்’ என செயல்படவிருக்கின்றார்கள்!

முன்வரும் 5 ஆண்டுகளில் நற்செய்திப்பணியின் விரிவாக்கமும், விசுவாசிகளின் ஆவிக்குரிய முதிர்ச்சியும் மேம்படும்; மேலும், தன்னிறைவு பெற்ற தளச்சபையாகத் திகழும் எனும் தூர தரிசனத்துடன் இச்செயல்பாடுகள் இடம்பெறுகின்றன. “பணித்தள நற்செய்தி“க்காக (Mission Festival) என்று குறிப்பிட்டு, சிறப்பு நன்கொடைகளை நம் முன்னேற்றப்பணி ஊழியர்கள் அல்லது பிரதிநிதிகள் மூலம் உவந்தளியுங்கள். ஜெபம், விசுவாசம், உபதேசம், அந்நியோந்நியம், சுவிசேஷ வேலையில் உறுதியாய் தளத் திருச்சபைகள் வளர்ந்துபெருகட்டும், கர்த்தரின் நாமம் மகிமையடையட்டும்.

வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக!

19.01.2023 அன்று சென்னை – வேளச்சேரி பகுதியிலுள்ள பூர்வீக அழகிய கட்டடத்தை விஷ்வவாணி பணிக்காக மிகுந்த தியாகத்துடன் உவந்தளித்த மதிப்பிற்குரிய திரு. நல்லதம்பி தேவசகாயம் – திருமதி. சுசிலா ஆகியோரையும் குடும்பத்தின் பிள்ளைகளையும் நிர்வாகக் குழுவின் சார்பில் வாழ்த்தி, நன்றி கூறுகிறோம். தளங்களிலிருந்து வரும் ஊழியர்கள் தங்கி, புத்துணர்ச்சி பெற்றுச் செல்லும் ஸ்தலமாகவும், ஜெப அறையாகவும், விரிவாக்கப்பணி ஊழியங்களின் செயலகமாகவும் அமையப்பெற்றிருக்கும் இந்த இல்லம், ஜார்க்கண்டு மாநிலத்தின் 5000 கிராமங்களில் கால்பதிக்கும் ஆயிரம் ஊழியர்களை அனுப்புவதற்குத் தீவிரப் பிரயாசமெடுக்கிறது; Rev. A.E. ஜெயராஜ் அவர்களுடன் இணைந்து செயலாற்றும் ஊழியர்கள், பிரதிநிதிகள், பணிப்பங்காளர்களை உங்கள் ஜெபத்தில் தாங்குங்கள்.

தரிசன இலக்கில் முன்னேறிச் செல்லும் வகையில், தேவச் செய்தியுடன் ஊழியங்கள் குறித்துப் பகிர்ந்தளிக்கக் கீழ்க்காணும் இடங்களில் தேவனளித்த வாய்ப்புக்காகவும், மிகுந்த ஒத்துழைப்பும் ஊக்கமும் அருளிய போதகர்கள், பொறுப்பாளர்கள், உடன் ஊழியர்களுக்காகவும் தேவனுக்குத் துதி செலுத்துகிறேன், அதிக நன்றிகூறுகிறேன்.

22.01.2023 – சி.எஸ்.ஐ. தூய மரியாள் ஆலயம், ராணிப்பேட்டை
26.01.2023 – திருமலா ஜெப ஐக்கியம், திருவனந்தபுரம்
28.01.2023 – வடதமிழக பணிப்பங்காளர் முகாம், படப்பை
29.01.2023 – சர்வ வல்ல தேவனின் சபை, அமைந்தகரை, சென்னை
04.02.23 – சி.எஸ்.ஐ. தூத்துக்குடி – நாசரேத் பேராய அளவிலான உபவாச ஜெபம்
05.02.23 – சி.எஸ்.ஐ. கிறிஸ்து ஆலயம், கே.வி.கே. நகர், தூத்துக்குடி

இதுபோன்று, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் திருச்சபைகள், விசுவாசக் குடும்பங்கள், நிறுவனங்கள், தனிநபர்கள் என ஜெப ஆதரவும், ஈகையும் தந்து தேவபணியைத் தாங்கும் யாவருக்கும் என் சார்பாகவும், நிர்வாகக்குழு சார்பாகவும் நன்றிகூறுகிறேன். உங்கள் அநுதின ஜெபங்களில் ஊழியங்களுக்காக ஜெபிக்க மறவாதிருங்கள். உங்களை நினைக்கும்போதெல்லாம் நாங்களும் ஜெபிக்கிறோம்.

"நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன். உபா. 26:19

சென்னை
12.02.2023

அறியப்படாத கிராமங்களின் சார்பாக உங்கள் சகோதரன்
W. வில்சன் ஞானக்குமார்

உங்கள் அன்பின் ஈகையினை ஆன்லைனில் அனுப்புவதற்கான வங்கி விபரங்கள்

Bank : State Bank of India
A/C No. : 10151750252
Branch : Amanjikarai, Chennai - India.
A/C Name: VISHWA VANI
IFS Code : SBIN0003273

இரசீது அனுப்புவதற்கு உதவியாக, தயவுகூர்ந்து தங்கள் முகவரியைத் தெரிவியுங்கள். Contact ✆ 94 44 45 56 46

முதன்முறையாக பிரிஜியா மேளா

ஜார்க்கண்டு மாநிலம் கும்லா மாவட்டத்தின் ஹரூப் தளத்தில் 2023 மார்ச் 12–14 தேதிகளில் இடம்பெறவுள்ள பிரிஜியா மேளாவுக்கு 300 விசுவாசிகள் ஆயத்தமாகுகின்றனர், ஜெபியுங்கள். கர்த்தராகிய இயேசுவைப் பற்றும் விசுவாசத்திலும், சமுதாயத்திலும் இக்காலங்களில் மேலோங்கும் பிரிஜியா ஜனங்கள் நடுவில் தேவன் மேன்மேலும் தமது அநுக்கிரகங்களை ஊற்றுவாராக. – மேளா ஒருங்கிணைப்பாளர்.

2008 மார்ச் விஷ்வவாணி சமர்ப்பண் இதழுக்காக எமில் அண்ணன் எழுதிய சிறப்புக் கட்டுரை

கர்த்தருடைய வசனம் மன்னா! அதை உட்கொள்ளுங்கள், உள்ளான மனுஷனில் வல்லமையாய் பெலப்படுங்கள்!

அன்பார்ந்தவர்களே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களே, எனக்கும், உங்களுக்கும், உலகில் வாழும் அனைவருக்கும் உள்ளான மனுஷன், வெளியான மனுஷன் என்ற இரண்டு உண்டு.

வெளியான மனுஷன் கண்ணிற்குத் தெரியமுடியும். ஆளைப் பார்க்கிறார்கள், அமைப்பைப் பார்க்கிறார்கள், அழகைப் பார்க்கிறார்கள்! ஆனால் ஒருவரின் உள்ளான மனுஷனோ பிறிதொருவர் கண்ணிற்குப் புலப்படுவது இல்லை! உள்ளான மனுஷனை மனித அறிவு துளையிட்டுப் பார்க்க முடிவதே இல்லை. மனதிற்குள் மறைந்து கிடக்கும் எண்ணங்களை, நோக்கங்களை, பாவங்களை ஒருவராலும் கண்டுகொள்ள முடிவதில்லை! உள்ளான மனுஷன், வெளியான மனுஷன் என்ற இரண்டும் முக்கியமானதே, ஆனால் உள்ளான மனுஷன் என்பதில் கவனம் இல்லையென்றால், வெளியான மனுஷனின் செயல்கள் பாவச் செயல்களாகும். உள்ளான மனுஷன் அலட்சியம் செய்யப்படும்வரை வெளியான மனுஷன் பரிசுத்தம் காணப்போவது இல்லை!

மனிதன் ஓர் உடல் மட்டும் அல்ல! அவனுக்குள் ஓர் உள்ளான மனிதன் இருக்கிறான் (எபேசியர் 3:16). அவன் பெயர் ஆத்துமா! ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று கூறுகள் கொண்ட ஓர் அமைப்பு தான் (COMPOUND BEING) மனிதன்! (1 தெச. 5:23).

வெளியான மனுஷன் தேய்கிறான், உள்ளான மனுஷனோ தேய்வதே இல்லை!
வெளியான சரீரம் வயது கூடக் கூட பெலவீனமடைகிறது,
உள்ளான மனுஷனோ, ஆத்துமாவோ, வயது கூடக் கூட பெலவீனமாகுவதே இல்லை!
வெளியான மனுஷன் ஓர் நாள் ஆறடி ஆழத்தில் அமர்த்தப்படுகிறான்,
உள்ளான மனுஷனோ நித்தியம் நித்தியமானவன்!
வெளியான மனுஷனை உலக உணவுகள் போஷிக்கின்றது,
உள்ளான மனுஷனையோ ஆவிக்குரிய ஆகாரம் மட்டுமே போஷிக்கும்!
மனிதன் தன் உள்ளான மனுஷனை தானே போஷிக்க முடியாதவன்!
அவன் எத்தனையாக ஓடினாலும், தேடினாலும், ஆடினாலும், பாடினாலும்
கூக்குரலிட்டாலும், தீக்கடந்தாலும், தண்ணீரில் நீராடினாலும், துறவறம் பூண்டாலும்,
சன்னியாசம் எடுத்தாலும், மதங்களுக்காக வைராக்கியம் காட்டினாலும்,
மதத்திற்காக உடலையே சாகக்கொடுத்தாலும்,
உணவுகளில் பல கட்டுப்பாடுகள், உடைகளின் நிறங்களில் கட்டுப்பாடுகள் என்று
எத்தனை, எத்தனையோ வைத்துக்கொண்டாலும்
மனிதன் சொந்த முயற்சிகளினால் உள்ளான மனிதனை போஷிக்கவே முடியாது!

'குளோன்' அல்லது குளோனிங் (Cloning) என்பதைப் பற்றி அறிய வருகிறோம்.
செடிகளை, மிருகங்களை
அவைகள் இருப்பதுபோன்று செயற்கையாக செதுக்கிவிடுகிறார்கள்.

ஆனால் மனிதன் பிறிதொரு மனிதனை குளோன் செய்யவேமுடியாது!
ஏனெனில் மனிதன் என்பது மிருகம்போல் ஓர் வெறும் உடல் மட்டுமல்ல,
ஆத்துமாவும் சரீரமும் சேர்ந்ததே மனிதன்!
உள்ளான மனுஷனை, ஆத்துமாவை, குளோன் செய்யவே முடியாது!

மிருகங்கள் சாகின்றன, அத்துடன் அதன் அத்தியாயம் முடிந்துவிடுகின்றது,
அதன் சரித்திரம் நின்றுவிடுகின்றது. ஆனால் மனிதன் மரித்தாலும்,
வாழவே போகிறான் – அவன் உடல் ஓர் நாள் உயிர்த்து எழும்பும்!
அப்பொழுது அவனது ஆவி, ஆத்துமா ஒன்றாகக் கூடும்!
நித்திய ஜீவன் அல்லது நித்திய இருள் என்பது அவன் இறுதிப் பங்காகும்!

தேகாப்பியாசம், ஆரோக்கியம் தரும் ஆகாரம், பெலமான தோற்றம் –
என்று மனிதன் தன் வெளியான மனுஷனுக்குக் கொடுக்கும்
முக்கியத்திற்கு அளவே இல்லை! அவனது சரீர பெலன், சாமர்த்தியம் கொண்டு
அவனைப் படைத்த கடவுளையே அவன் சவால் விடுகிறான்,
அல்லது அவனது கையினால் ஓர் படம் வரைந்து, ஓர் உருவம் அமைத்து,
இதுதான் கடவுள் என்று கூறும் அளவிற்கு துணிவுபெறுகிறான்!
எங்களுக்கு முன்செல்லும் தெய்வம் தேவை என்றார்கள்!
ஆரோன் ஒரு நொடிப்பொழுதில் பொன்னை உருக்கினான்,
கன்றை உருவாக்கினான் –அதன்முன் குதித்து கூத்தாடினார்கள்! (யாத். 32: 1-6).

உள்ளான மனுஷன், வெளியான மனுஷன் என்ற இந்த சத்தியத்தை அறிந்துவிடுவதும்,
உள்ளான மனுஷன் போஷிக்கப்படும் விதம் என்ன,
போஷிக்கும் நபர் யார் என்பதை கண்டுவிடுவதும்,
முதலாவது போஷிக்கப்படவேண்டியது என் ஆத்துமாவே,
அதன் பின்னரே வெளியான மனுஷனுக்கு உணவு என்ற
தீர்மானமான வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதும் போன்று
சிறந்தது பிறிதொன்றும் இல்லை!
கோலியாத் எத்தனை தான் பெரியவனாகக் காட்சி தந்தாலும்,
ஜீவனுள்ள தேவனை கசந்தாலும், ஓர் சேனையையே அவன் அஞ்ச வைத்தாலும்,
உள்ளான மனுஷனில் வல்லமைகொண்ட ஓர் சிறுவன் முன்
அவனால் நிற்கமுடியவில்லை! ஏன்?
வெளியான தோற்றத்தில் மனிதன் எத்தனை பெலசாலியாக காணப்பட்டாலும்,
அவன் உள்ளான மனுஷனில் குணசாலியாக இல்லையென்றால் அவன் ஓர் பூஜியமே!

வெளியான மனுஷனைப் போஷிக்க
சாப்பாட்டு மேஜையை சுற்றிய நாற்காலிகளில் உட்காரவேண்டும்,
உள்ளான மனுஷனைப் போஷிக்க
மரியாளைப்போன்று இயேசுவின் பாதத்தில் உட்காரவேண்டும்!
அவரது வார்த்தையை உட்கொள்ளவேண்டும்!
வெளியான மனுஷனுக்குப் போஜனம் அடுப்பில்!
உள்ளான மனுஷனுக்குப் போஜனம் வார்த்தையில்!
கர்த்தருடைய வசனம் மன்னா என்று இந்த மாத சமர்ப்பண் கூறுகின்றது!

“மன்னா” என்பதற்கு பிலோ(Philo) என்பார் கூறுவது “லோகாஸ்”(Logos) என்பதாகும்.

அந்த “லோகாஸ்” என்ற வார்த்தை தான் யோவான் 1:1ல் வருவது!
“ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது,
அந்த வார்த்தை தேவனாய் இருந்தது”.
பிறிதொரு முறையில் கூறினால் –
“ஆதியிலே மன்னா இருந்தது, அந்த மன்னா தேவனிடத்தில் இருந்தது,
அந்த மன்னா தேவனாக இருந்தது”.

மன்னாவை உட்கொள்ளுகிறவர்கள்
தேவ வல்லமையை உட்கொள்ளுகிறார்கள்.
அப்பொழுது உள்ளான மனுஷனில் வல்லமையாக பெலப்படுகிறார்கள்!
அந்த மன்னா வானத்திலிருந்து வந்து பூமியில் இறங்கிய,
சிலுவையில் தொங்கிய, என், உன் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே!
அவரல்லாமல் பிறிதொருவராலும்
மனிதனின் உள்ளான மனுஷனின் நாடித்துடிப்பை பார்க்கமுடியாது!
அவனது பாவ வியாதியை அறியமுடியாது, போக்கமுடியாது!
அன்று ‘மன்னா’ விழுந்தபோது ஒருவரை ஒருவர் பார்த்து,
“இது என்ன?” (யாத்திராகமம் 16:15) என்றார்கள்.
இன்றும் அதே கேள்விதான்! இது என்ன?
உள்ளான மனுஷன் என்பது என்ன? ஆத்துமா என்பது என்ன?
ஆவிக்குரிய வாழ்க்கை, கர்த்தருடைய வசனம்,
வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பது என்பதெல்லாம் என்ன?
அதற்கு, அவ்விதமான கேள்விகளுக்கு
விடையே இல்லை, விளக்கமே இல்லை!

இயேசுவை ருசித்துப் பார்க்காமல் இயேசுவை அறிந்துகொள்ளவே முடியாது.
கருத்தோடு, கவனத்தோடு, ஆவலோடு, வாஞ்சையோடு
குறித்த நேரத்திற்கு முன்பே எழுந்து,
அதிவிருப்பத்தோடு பரிசுத்த வேதாகமத்தை கையில் எடுக்காமல்,
அதில் முகத்தைப் பதிக்காமல் இயேசுவை அறிவதும் கூடாது!
அனுபவிப்பதும் முடியாது!

வார்த்தையை வாசிக்காமல்
இந்த வனாந்தர வாழ்வில் நிச்சயத்துடன், தைரியத்துடன் நடக்கவும்முடியாது!
அன்று சுமார் இருபது இலட்சம் இஸ்ரவேல் ஜனங்கள்
நாற்பது வருடம் இந்த மன்னாவைப் புசித்தார்கள்.
அனுதினமும் அதிகாலையில் (யாத்திராகமம் 16:21) புசித்தார்கள்!
என்று கானானுக்குள் கால்வைத்தார்களோ அன்று மன்னா நின்றது!
கானானின் உணவு போஷித்தது! “அவர்கள் தேசத்தின் தானியத்திலே புசித்த
மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது;
அதுமுதல் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா இல்லாமற்போய்,
அவர்கள் கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்தில்தானே புசித்தார்கள்.”
– யோசுவா 5:12

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுக்கு இந்த உலக வாழ்க்கை ஓர் வனாந்தரப் பிரயாணமே! அதில் தங்கள்

ஆத்துமாவைக் காத்துக்கொள்ளவும், மற்ற ஆத்துமாக்களை இயேசுவிடம் சேர்த்துவிடவும் அவர்கள் உள்ளான மனுஷனில் தினம் தினம் வல்லமையாக பெருகுவதற்கு பரிசுத்த வேதாகமமே! பரிசுத்த வேதத்தை காலையில் கையில் எடுக்காமல் பரிசுத்தமான ஜீவியத்தை பகலில் இதயம் சுமப்பதே இல்லை!

விசுவாசிகளும், முழுநேர ஊழியர்களும்
வேத வசனமாகிய மன்னாவை உட்கொள்ளாமல்:

1. சோதனைகளை ஜெயிப்பதே இல்லை.
2. ஆத்துமாக்கள்மேல் பாரம் பெறுவதே இல்லை.
3. சுவிசேஷ ஊழியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இல்லை!
   அவர்கள் விசுவாச வாழ்வும், செய்யும் ஊழியமும் ஓர் கேலிக் கூத்தே!
   கோலியாத்தைவிட எவ்வளவும் அவர்கள் வித்தியாசமானவர்கள் அல்ல!
   நாகமான் வீட்டு வேலைக்காரப் பெண் அவர்களைவிட அதி சிறந்தவள்!
   கர்த்தருடைய மன்னாவை உட்கொள்ளாத விசுவாசி, ஊழியனிடம்
   வெள்ளியும் பொன்னும் இருக்கலாம்,
   இயேசு இருக்கமாட்டார்!

   சகோதரனே, சகோதரியே –
   நீ கர்த்தருடைய வசனத்தை உட்கொண்டு எத்தனை நாளாயிற்று?
   இந்த வனாந்தர வாழ்வில் சோதனைகள் உண்டு,
   பிசாசின் கண்ணி வெடிகள் உண்டு,
   சன்பல்லாத்து, தொபியாக்கள் உண்டு,
   மனிதரின் கோபம் உண்டு, சீற்றம் உண்டு –
   அத்தனை அலைகளையும் தாண்டி, தாண்டி நீ செல்லவேண்டும்!
   அதற்கு கர்த்தருடைய வசனத்தை உட்கொள்ளவேண்டும்!

அதை எவ்வளவாக உட்கொள்கிறாயோ அவ்வளவாக:

1. ஆவிக்குரிய பரீட்சையில் யோசேப்பைப்போல மாறுவாய்.
2. விசுவாசப் போராட்டங்களில் சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ போன்று திகழுவாய்.
3. ஆத்தும ஆதாயத்தில் பவுலைப்போன்று
   கர்த்தருடைய வசனத்தை விதைக்கிறவனாக மாறுவாய்.
4. எத்தனை ஆழமான உபத்திரவத்தின் குகைக்குள் நீ விழத் தள்ளப்பட்டாலும்,
   தானியேலைப்போல் நிற்பாய்.
5. நீ இந்த வனாந்தர பிரயாணத்தை முடிக்கும்போது
   “நீ அறியாத மன்னா” (வெளி. 2:17) உனக்குக் கொடுக்கப்படும்.

இதுவே விசுவாச வாழ்வு, இதுவே ஆவிக்குரிய பிரயாணம், இதுவே இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களின் வாழ்க்கை நெறி! மன்னாவை உட்கொள்ளும் அனைவருக்கும் உள்ளும் புறமும் வழிந்தோடும் ஜீவியம் உண்டு, மற்றவர்க்கு உள்ளே பாவமும் புறம்பே கோபமும் வழிந்தோடும் ஜீவியமே உண்டு!

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே
இன்றுமுதல் கர்த்தருடைய வசனம் உன் வாஞ்சையாகட்டும்,
அதிகாலையில் நீ கையில் எடுப்பது பரிசுத்த வேதமாகட்டும்!
உள்ளும் புறமும் நீ செழித்து ஓங்கட்டும்! ■

ஓர் பிரார்த்தனை

மண்ணிலிருந்து எங்களை
உருவாக்கியவரே,
ஜீவ சுவாசத்தை எங்களில்
ஊதியவரே,
ஏதேனில் எங்களுக்குள்
விழுந்துவிட்ட பாவ விஷத்தை
செயல் இழக்கச் செய்ய
கர்த்தருடைய வசனத்தை
நாங்கள் உட்கொள்ளச் செய்யும்!

ஏதேனைவிட்டு
வெளியேற்றப்பட்டாலும்
தமது வசனம்
எங்களை கல்வாரி சிலுவையில்
இணைத்துவிடும்
என்பதை அறிந்துவிடச் செய்யும்!

வாழ்க்கைப் பிரயாணம்
வசனத்தால் நடத்தப்படும்பொழுது
சூழ்நிலைகள்
அதே சூழ்நிலைகள் என்றாலும்,
உழைப்பில், ஊழியத்தில்
பின்வாங்குவதே இல்லை!
தனிமையாக விடப்பட்டாலும்
அச்சம் அறிவதே இல்லை!

கர்த்தருடைய வசனம்
பாவ விஷத்தைக் கொல்லக் கொல்ல
பாவம் எங்களை
கொல்லுவதே இல்லை!

எனவே, கர்த்தாவே,
கொஞ்ச நாட்கள் வாழும் இவ்வுலகில்
பெலத்தின் மிகுதியினால்
எண்பது வருடம் என்றாலும்
வருடத்தின் 365 நாட்களும்
முந்தி எழும்பிவிடச்செய்யும்,
மன்னாவை
முந்திப் பொறுக்கிவிடச்செய்யும்,
பந்தயத்தில் முந்திவிடச்செய்யும்,
கிரீடத்தைப் பெற்றுவிடச்செய்யும்.
எங்களுக்காக பிட்கப்பட்ட
இயேசுவின் நாமத்தில் ஆமென்!

எதைப் பொறுக்குகிறோம்!

சோதோம் கொமோரா மக்கள்
பாவத்தைப் பொறுக்கினார்கள்!
தேவ கோபத்தை பெருக்கினார்கள்!
ஐந்து நீதிமான்கள் கூட இல்லாத அளவிற்கு
சிறியோர் முதல் பெரியவர் வரை
அதிகாலை முதல் பின் இரவு வரை
பாவத்திற்கு மேல் பாவத்தை
அக்கிரமத்திற்கு மேல் அக்கிரமத்தை பொறுக்கினார்கள்!

கிருபையாக கொடுக்கப்பட்ட வாழ்நாட்களில்
மனிதர்கள் இன்றும் தங்களுக்குப் பிரியம் எதுவோ
அதையே பொறுக்குகிறார்கள்!
பட்டங்கள், பதவிகள், அதிகாரங்கள், உல்லாசங்கள்,
குடிகள், நடனங்கள், விருந்துகள், விழாக்கள்,
பெருமைகள், புகழ்கள், பெரும்பெயர்கள் என்று
தங்கள் இதயம் விரும்புவது எதுவோ அதையெல்லாம்
பொறுக்குகிறார்கள்! பொறுக்கி, பொறுக்கிப் பார்த்தும்
கண்டது ஒன்றுமே இல்லை, பெற்றது எதுவும் இல்லை!

என்று, கர்த்தருடைய வசனத்தை
பொறுக்கத் துவங்குகிறார்களோ
அன்று, ஆபிரகாமிற்கு ஒப்பாவார்கள்,
விசுவாசத்தில் வளருவார்கள்,
விசுவாசிகளின் தகப்பனுடன் இணைவார்கள்!

காலைதோறும் கர்த்தருடைய மன்னாவைப்
பொறுக்குகிறவர்கள்
வாழ்க்கை முழுவதும் ஆசீர்வாதத்தைப்
பொறுக்குகிறார்கள்!
எதைப் பொறுக்குகிறோம்?
பாவத்தையா, பரலோக மன்னாவையா?

பாவத்தைப் பொறுக்கப் பொறுக்க
நெருக்கங்களே கூடும்,
மன்னாவைப் பொறுக்கப் பொறுக்க
ஆசீர்வாதங்கள் அதிகரிக்கும்!

2 CORINTHIANS 5:21

பாவமறியாத அவரை...

கற்களும் முட்புதர்களும் நிறைந்து கிடக்கின்ற கரடு முரடான ஒரு பாதையில் ஒரு தகப்பனும் ஒரு பிள்ளையும் நடந்து சென்றுகொண்டிருக்கிறார்கள். தகப்பனுடைய இதயச் சுவற்றிற்குள் ஆயிரம் சுனாமிப் பேரலைகள் மோதிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் விசுவாச நடை தீவிரமாகப் போய்க்கொண்டிருக் கிறது. பிள்ளையோ ஜாலியாக நடந்துகொண்டிருக்கிறான். வீட்டை விட்டு வெளியே போகவேண்டும் என்றாலே பிள்ளைகளுக்கு சந்தோஷம்தான். ஆனால் பெற்றோருக்குத்தான் பணத்தைக் குறித்த – பயணம் பற்றிய கரிசனைகள் எல்லாம்.

தகப்பனுக்கு வயது முதிர்ந்துவிட்டது. பேரப்பிள்ளைகளை கொஞ்சவேண்டிய வயதில் ஒரு பிள்ளையைப் பெற்று, மொத்த அன்பையும் அப்படியே கொடுத்து வளர்த்த மகன். இப்போது துள்ளி துள்ளி தன்னோடு விளையாடிக் கொண்டே நடந்து வருகிறான் அந்த காட்டுப்பாதையில். தகப்பனின் கண்களில் கண்ணீர்; இதயத்தில் வேதனை; தன்னோடு வந்தவர்களை அங்கே நிறுத்திவிட்டு, நானும் என் மகனும் மட்டுமே இனி சென்றாகவேண்டும் என்று கையசைத்து பயணத்தை தொடர்கிறான்.

சமவெளிப் பாதை முடிந்து, மலைப்பாதை ஆரம்பிக்கிறது. மலையின் உச்சி தெரிகிறது. அந்த நான்கு கால்களும் மெல்ல மெல்ல நடந்து உச்சியை வந்தடைகின்றன. தகப்பன் ஆங்காங்கே கிடந்த கற்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பீடமாக மாற்றுகிறார். பிள்ளையும் அதற்கு உதவி செய்திருக்கவேண்டும். தகப்பனின் இதயம் இன்னும் உடைந்துபோனது. என் மகனே, உன்னை பலி கொடுப்பதற்காக கட்டிக்கொண்டிருக்கும் பலிபீடத்திற்கு நீயே உதவுகிறாயே என்று.

கொஞ்சம் முன்தான் அந்தப் பிள்ளை வெள்ளை மனதோடு கேட்டது: 'அப்பா பலிக்கான ஆடு எங்கே' என. அந்த கனத்த கேள்விக்கு விடை நீ தான் என்று சொல்லி, அந்தப் பிள்ளையை கிடத்தும்போது அந்தத் தகப்பன் மனதளவில் அங்கேயே செத்துப்போயிருக்கவேண்டும். சம்பவத்தின் மீதி பகுதி உங்களுக்குத் தெரியும். அங்கே அவர்களுக்கு ஒரு ஆடு அகப்பட்டது. தகப்பனும் மகனும் உயிரோடு திரும்பி வந்துவிட்டார்கள்.

இன்னொரு பலி நடக்கப்போகிறது, பலியாகப் போகிற மகனுக்கும் தெரியும், பலியை நிறைவேற்றப்போகிற தகப்பனுக்கும் தெரியும் இன்னொரு ஆடு கிடைக்காது என. அப்படியே கிடைத்தாலும் தீட்டுப்பட்டு போயிருக்கும், இந்த மனிதர்களின் இதயத்தை கழுவத் தகுதியான பரிசுத்த இரத்தமாக அது இருக்கமுடியாது என்று.

இவ்வுலகத்தின் முதல் நாள் துவக்கி அதன் இறுதி நாள் வரை மனிதர்கள் சந்திக்கமுடியாத அல்லது விரும்பாத கொடும்துயரம் என்று ஒன்று இருக்குமென்றால் அது மரணமே. நாம் கூட மரணத்தை எளிதாக சந்தித்துவிடலாம், ஆனால் நமக்கு அருமையானவர்களை இழக்கும்போது ஏற்படும் துயரத்தைப் பொறுத்துக் கொள்ள ஆயிரம் இதயங்கள் வேண்டும்.

இவ்வுலகத்தின் தாங்கமுடியாத துயரம் என்பது நிரந்தரமாக உறவுகளை இழப்பது. மரணித்தவர்கள் இனி மீண்டு வரமாட்டார்கள் என்று நினைக்கும்போதே

மூச்சு முட்ட ஆரம்பித்துவிடும். அதேபோல, ஆகச்சிறந்த மகிழ்ச்சி என்பது இழந்த உறவுகளை மீண்டும் பெற்றுக்கொள்வது. உதாரணமாக, நமது குழந்தை ஒன்று காணாமல் போய் சில வருடங்களுக்கு பின்பு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு நம்மோடு இணைக்கப்பட்டுவிட்டால் ஏற்படும் பேரானந்தத்தை போல! கெட்ட குமாரன் திரும்பி வந்தபோது வீடு விருந்து வீடாக மாறியது பாருங்கள் – அதுபோல!

அன்பில் பரிசுத்தமான பிதா தன்னுடைய ஏக சுதனை பலிபீடத்தின் மீது வைத்த போது அவருடைய இருதயத்தினுடைய வேதனை எவ்வளவாக இருந்திருக்கும்?

பாவமே அறியாத என்னுடைய பரிசுத்தப்பிள்ளை இந்தப் படு பாதகர்களான மனிதர்களுக்காக, சிந்தப்படக்கூடாத தன் பரிசுத்த இரத்தத்தை சிந்தித்தான் ஆக வேண்டுமா என்கின்ற கேள்வியை சந்தித்திருக்கும். ஆனால் புழு பூச்சிகளைப் போன்ற இந்த மனிதர்களை அவர் அளவுகடந்து நேசித்ததினால் தன்னுடைய தலைப் பிள்ளையை சங்காரம் பண்ணுவதற்கு சம்மதித்தார்.

பாவம் அறியாத தலைப்பிள்ளையும் தன் தகப்பனின் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சி என்று நினைத்ததினால் அதற்கு தலையாட்டினார். அதனால் இந்த கொடுமையான பலி நிறைவேற்றி முடிக்கப்பட்டது. இருண்டு கிடந்த மனுக்குலத்திற்கு நித்திய வாழ்வு என்னும் பெரும் நம்பிக்கை மீண்டுமாக கை கூடியது. இவ்வுலகை மீட்பதற்காக ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கப்போகிறோம் என்கிற பெரும்பணியை சுமந்துகொண்டு உலகிற்குள் வந்த இயேசு கிறிஸ்து தன்னை அதற்கு தகுதியாகவே வைத்திருந்தார்.

30 ஆண்டுகள் தன் தாய் தந்தையின் வீட்டிலிருந்து அவர்களுக்கான காரியங்களை அவர் பார்த்துக்கொண்டிருந்தபோது தன் மீது பாவ அழுக்குகள் ஒட்டாதவாறு தன்னை காத்துக்கொண்டது அவரது ஜீவியத்தின் மிக முக்கிய பகுதி. அழகில் சிறந்த – அறிவில் நிறைந்த அவரை எப்படியேனும் தன் கால்களின் கீழே கொண்டுவருவதற்கு சாத்தான் வலைகளை விரித்துக்கொண்டேதான் இருந்திருப் பான். அனுதினமும் அவருக்கான சோதனைகள் அவர் வீட்டு வாசற்படியின் வழியாக வந்துகொண்டேதான் இருந்திருக்கும். ஆனால் வேதம் சொல்லுகிறது: “அவர் பாவத்தை அறியவில்லை” என்று. அல்லது அவர் பாவத்தை அறிய முயற்சி செய்யவில்லை என்று கூட எடுத்துக் கொள்ளலாம்.

பாவத்தை அறிவது என்பது என்ன?

பாவம் பளபளப்பாக்கப்பட்டு, பரிமாறப்படும்போது அதை நாம் பார்க்கும்படியோ கேட்கும்படியோ தொடும்படியோ நம் உணர்வுகளை தட்டி எழுப்பி அதைக் குறித்து அறிய – ஆராய முற்படுவது. அதாவது, படைக்கப்பட்டது முதலே இருந்த அறிவின் கனியை அதைக் குறித்த விளக்கம் ஒன்று பளபளப்பாக்கியது. அந்த பளபளப்பு தூண்டிய ஆர்வத்தில் கனியை பார்த்து – ரசித்து – தொட்டு – பறித்து – புசித்து... இதுதான் பாவத்தை அறிவது.

தன் மீது விழுந்த எந்தப் பாவ வலைகளையும் ஆர்வத்தினால் இயேசு கிறிஸ்து அறிய விரும்பவில்லை, மாறாக அறுத்து எறிந்தார். அதனால்தான் பாவியான ஸ்திரீகள் அவரை சந்தித்தபோதும் கூட அவருக்குள் பாவ எண்ணங்கள் வராமல் அவர்களின் விடுதலை குறித்த பரிதாப எண்ணங்களே வந்தது.

இன்று மனிதர்கள் பாவத்தை அறிந்துகொண்டே இருக்கிறார்கள்.

தேவையின்றி மொபைல் போனை பார்க்கும்போது வந்துவிழும் பளபளப்புகள் எவ்வளவோ பாவங்களை நமக்குத் தெரியாமலேயே நம் கண்கள் வழியாக பீச்சி அடிக்கின்றன. அரை மணி நேரச் செய்தி சேனல்கள் வழியாக எவ்வளவோ தேவை யற்ற பாவ அறிவுகள் நமக்கு கற்றுக்கொடுக்கப்பட்டுவிடுகின்றன. இப்பாவ விதைகள் இதயத்திற்குள் சென்று கர்ப்பம் தரிக்கின்றன. பின்பு மரணத்தை பிறப்பிக்கின்றன.

ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு பகுதி வழியாக பாவத்தை அறிகின்ற வாய்ப்புகள் வரும்போது அதை பக்குவமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். சிலருக்கு மற்றவர்களை குறித்து மட்டமாகப் பேசுவதில் பாவத்தை அறிகின்ற வாசல்கள் திறக்கின்றன. சிலருக்கு கம்ப்யூட்டர்கள் யாரும் இல்லாத நேரத்தில் பாதாளப் படுகுழிகளை காட்டுகின்றன. வேறு சிலருக்கோ பணத்தைக் கண்டால் ஒரு விதமான பதட்டம் ஏற்பட்டு கணக்குகளை மாற்றி எழுதவும், வரிஏய்ப்பு செய்யவும் கள்ளத் தனங்களினால் கையூட்டுபெறவும் வாசல்கள் திறக்கின்றன. வேறு பலருக்கும் எதிர்பாலரின் அசைவுகளில் – பேச்சுகளில் – சிரிப்புகளில் இதயத்தை தொலைத்து, தாங்கள் விரும்பும் சிற்றின்பத்தை அடைய பிள்ளைகளைக் கூட கொன்றுபோடும் அளவிற்கு மரண வாசல்கள் திறக்கின்றன.

ஏதோ ஒரு வகையில் நாம் எந்தப் புழுவில் சிக்குவோம் என தெரிந்துவைத்த ஒருவன் நமக்கானத் தூண்டில்களை போட்டுக் கொண்டே இருக்கிறான். இரையை மட்டும் கடித்துவிட்டு, தூண்டிலை துப்பிவிடும் கலையில் நாம் கைதேர்ந்தபடியினால் இரைகளைத் தின்று, தூண்டிலை துப்பி, துள்ளித் துள்ளி விளையாடிக் கொண்டிருக் கின்றோம். நாம் சிக்குவதில்லை என்கிற எண்ணம் நமக்குள் மேலோங்கிவிட்டது. ஏனெனில் பாவ விளையாட்டுகளில் நாம் தலைசிறந்த வீரர்களாக இருக்கிறோம்.

ஆனால் இந்த மீன்களின் மகிழ்ச்சி நீண்ட நாளைக்கு நிலைப்பதில்லை என்பது மேலே தூண்டில் போட்டுக்கொண்டிருக்கின்ற அவனுக்குத் தெரியும்! தன் தளராத முயற்சியில் தினந்தோறும் மீன்களை அள்ளிக்கொண்டிருக்கும் அவன் கூடையில் ஒவ்வொரு நாளும் நமக்கு அறிமுகமான மீன்கள் சிக்குகின்றன. அவைகள் சிக்கிக் கொண்டதற்கான ஒரே ஒரு காரணம் பாவத்தை அறிய ஆசைப்பட்டது தான்.

அன்பிற்குரியவர்களே, இயேசு கிறிஸ்து இந்தக் காலத்தில் வாழ்ந்திருந்தால் எதையெல்லாம் செய்வார், எதையெல்லாம் செய்திருக்கமாட்டார் என்கிற அறிவு நம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரை அறிகிற அறிவிலே நாம் விருத்தி அடையவேண்டுமென்றால் அவரால் கொடுக்கப்பட்ட வேதத்தின் சத்தியத்தையும், நமக்கு ஆசிரியராக – தோழனாக – துணைவனாகத் தரப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியானவரையும் சார்ந்துகொண்டு இரண்டு கால்களுக்கும் துணையாக இந்த இரண்டு ஊன்றுகோல்களை வைத்துக்கொள்வோமென்றால் பாவ அறிவில் நாம் குறைந்தவர்களாகவும் தேவ அறிவில் நிறைந்தவர்களாகவும் வீறுநடை போடமுடியும். அப்போது உலகத்திற்கு பைத்தியக்காரர்களாகவும் தேவனுடைய பார்வையில் உண்மையுள்ளவர்களாகவும் இருப்போம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்கு செய்த மாபெரும் தியாகத்தை அதிகமாக தியானிக்கும் இந்நாட்களில் சிலுவையின் அன்பு நம் இதயங்களை நிறைக்கட்டும். அந்த அன்பின் இரத்தத்தின் வல்லமையினால் நம்மை நாம் பரிசுத்தமாக்குவோம். – ஹரிஸ் பிரேம், விஷ்வவாணி மீடியா

விசுவாச எட்டுகளில்...

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளும் முதல் தலைமுறை விசுவாசிகள் தளங்கள் எங்கும் பெருகும் இக்காலத்தில் இயேசுவின் மகிமைக்காக 100 ஆலயங்களைக் கட்டவேண்டும் என்பதே எங்கள் அடிமனதின் விருப்பமும் தேவனை நோக்கி நாங்கள் ஏறெடுக்கும் விண்ணப்பமும் ஆகும். அந்தப் பரிசுத்த வாஞ்சையைப் பரிசுத்த ஆவியானவர்தாமே நிறைவேற்றுகின்றார், ஸ்தோத்திரம்.

ஒன்று, இரண்டு என்று எங்களை நடத்தின கர்த்தர், இன்று 25வது ஆலயத்தைக் கட்டி, பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொள்ளும் பாக்கியத்தையும் தந்திருக்கிறார்! 5 பேர் கொண்ட குழுவாக ஆந்திர மாநிலம் மன்யம் மாவட்டத்தில் பாலமனுகுடா பணித்தளத்தில் 16.10.2022 அன்று அவ்வாலயத்தைக் கிறிஸ்து இயேசுவின் திரு நாம கீர்த்திக்கென்று ஸ்தோத்திரத்துடன் திறந்தோம், அல்லேலூயா! கர்த்தருக்குச் சித்தமானால் 26வது ஆலயத்தை ஒடிசாவின் கந்தமால் மாவட்ட மலையில் திறப்பதற்கு ஆயத்தப்படுகிறோம். ஜெபிப்போர் அனைவருக்கும் நன்றி; எழுந்து கட்டும் இப்பணியில் இதயப்பூர்வமாக ஈடுபடும் விசுவாச உள்ளங்களுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். – கோத்தகிரி ஜெபக்குழு சார்பில் பரந்தாமன்.

அழைத்தவர் உண்மையுள்ளவர்...

மேற்கு வங்காளத்தில் சந்தாலி ஜனக்கூட்டம் வாழும் சிங்போர்கா எனும் எங்கள் கிராமத்தில் என் பெற்றோர் சிந்திய கண்ணீருக்குக் கணக்கில்லை! 32 வயது நிரம்பிய என் ஜீவியம் மதுப்பழக்கத்தாலும் பெரும் பாதகத்தாலும் நிறைந்திருந்தது. தகாத நண்பர்களின் சகவாசம் பாவக் குழிகளில் என்னை மூழ்கவைத்தது. இனி வாழ்வு இல்லை என்றதொரு நிலையில்தான் ஊழியர் ஸ்டீபன் பாஸ்கேயின் சந்திப்பு கிட்டியது. என்னை வெறுத்தவர்களே அதிகமதிகமாக இருந்த என் பகுதியில், என்னைத் தன்னார்வத்துடன் தேடி வந்து அவ்வூழியர் அறிவித்த செய்தியில் அன்பு ஒன்றையே கண்டேன்; அது இயேசுவின் அன்பு என்பதை ஊழியரின் தொடர் சம்பாஷனையில் அறிந்துகொண்டேன்!

என் பாவங்களைக் கழுவிய கிறிஸ்து இயேசுவின் ஜீவ ரத்தம் இன்றும் எத்தனை வல்லமையுள்ளது என்பது என் மனமாற்றத்தால் பெற்றோருக்கும் தெரிந்துவிட்டது! நானும் என் வீட்டாரனைவரும் இயேசுவையே சேவிக்கிறோம். பாவ இருளில் கிடக்கும் ஒரு கூட்ட ஜனத்திற்கு தேவ வெளிச்சம் கொடுக்க சிங்போர்கா சபையின் மூப்பர் ஊழியத்தில் என்னைப் பயன்படுத்தும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! - சுப்ரோதோ துடு.

வசனங்களில் வல்லமை...

சோன்சாரி என்ற பணித்தளத்தில் என் நண்பர்களின் அழைப்பின் பேரில் வேதபாட சாலையில் முதன் முறையாய்ப் பங்கெடுத்தேன். மூன்று வருடங்களாக மருத்துவமனைகள் - மந்திரங்கள் என்றே சென்ற என் பெலவீன சரீரத்திற்கு, வேதபாட வகுப்பில் கேட்ட ஜீவ வசனங்கள் புத்துயிர் அளித்துள்ளது. பாவ சாப வியாதிகளினின்று மனிதரை இரட்சிக்க வந்தவர், என்னையும் நேசிக்கிறார் என்ற சந்தோஷ செய்தியினால் என் துயரங்களும், வியாதிகளும் தூரமாயிற்று! இவ்வுலக வாழ்வில் எதை இழந்தாலும், தேவ வசனங்களைக் கேட்பதை இழக்கவே கூடாது என்பதே என் இதய வாஞ்சை! வாரந்தோறும் கூடும் எங்கள் ஐக்கியம் கிறிஸ்துவில் பெலப்பட ஜெபியுங்கள்.

- புதிய விசுவாசி ஹரிசரணா, சத்தீஸ்கடு.

எஸ்ராக்கள் ஆயத்தம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக அங்கீகரித்து, முழுநேர ஊழியத்திற்கான தேவ அழைப்பைச் சிரமேற்று, சுவிசேஷம் சொல்லப்பட்டிராத கிராமங்களைக் குறித்த சிந்தைகொண்ட இளைஞர்களே எஸ்றாக்கள் எனப்படுகிறார்கள். மும்மாத ஊழியப் பயிற்சிக்குப் பின் முழுநேர ஊழியர் வரிசையில் இணைகிறார்கள். செகந்திராபாத் - லாலாபேட்டில் இயங்கும் தெலுங்கானா மாநில அலுவலகத்தில் 27.01.2023 அன்று நடத்தப்பட்ட எஸ்றா முகாமில் 12 இளைஞர்கள் பங்கேற்றனர். விஷ்வவாணி ஊழியத்துடன் இணைந்து பணிபுரிவதற்குக் கர்த்தர் தங்களைப் பிரத்யேகமாக அழைப்பதைப் பகிர்ந்தனர்.

தெலுங்கானா மாநிலத்தின் ஊழியர் தேவை நிறைந்த 263 கிராமங்கள் சர்வே மூலம் தெரிந்தெடுக்கப்பட்டு, களம் திறக்க ஆயத்தமாயுள்ளன. அறுவடையின் எஜமானர் தாமே தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப வேண்டிக்கொள்ளுங்கள்.

– ஒருங்கிணைப்பாளர்.

என் வாழ்வின் நிறைவு இயேசு

கையிட்டுச் செய்யும் எதிலும் நஷ்டங்களைக் கண்டவன் நான். சிந்தும் வேர்வைக்கும், செலவழிக்கும் பணத்துக்கும் பிரதிபலன் காணாத என் வியாபாரத்தால் வாழ்வில் நொடிந்து, பற்பல கேள்விகளுடன் குழம்பிக்கொண்டிருந்தேன். இமாச்சலப் பிரதேசம் - சக்காத் கிராம ஊழியரின் சந்திப்பும், சம்பாஷனையும் என்னைச் சிந்திக்க வைத்தது. நிலைகுலைந்தவர்களின் ஜீவியம் மலர்ந்த அனுபவங்களை வேத வாக்கியங்களை நடுவாக வைத்து கற்றுத்தந்தார்; ஜெபிக்கவும் கற்றுத்தந்தார்.

இயேசுவின் நாமத்தில் முழங்காலில் நிற்க நிற்க வரவுகள் என் கரங்களில் தங்குகிறது. ஏமாற்றங்கள், தோல்விகள், நஷ்டங்கள், மன உளைச்சல்கள் என்றிருந்த என் ஜீவியம் இன்று "அவன் கையிட்டுச் செய்வதெல்லாம் வாய்க்கும்" என்ற ஜீவ வசனத்திற்குச் சான்றாக மாறியது. சக்காத் தளச் சபையில் வாரந்தவறாமல் பங்கெடுக்கும் என் இதய வாஞ்சையெல்லாம், "வாழ்வில் தோல்வி கண்டவர்கள் ஜெய கிறிஸ்துவால் ஜெயம் பெறவேண்டும்" என்பதாகும்.

– கரம்சந்த், இமாச்சலப் பிரதேசம்.

களஞ்சியங்கள் நிரம்புவதாக...

மகாராஷ்டிரா மாநிலம் – துளே மாவட்டத்தில் 83 கிராமங்களில் கர்த்தரின் ஊழியம் வர்த்திக்கின்றது; பரிசுத்தாவியானவரின் ஒத்தாசையினால் 20 ஆராதனைக் குழுக்கள் இம்மட்டும் மலர்ந்து, தேவ மகிமை தங்கும் ஸ்தலங்களாகத் திகழ்கிறது, துதியுங்கள். பாங்கன் பணித்தளத்தில் ஊழியர் தங்குவதற்கும், தள ஊழியங்கள் மேலும் வலுப்பெறுவதற்கும் ஏதுவான மிஷன் இல்லம் ஒன்று கட்டப்பட்டு

அப்பழுமான இடங்களுக்கு அனுப்பியவர்களுக்கு நன்றி...

திண்டுக்கல் மாவட்டம் களத்துப்பட்டி CSI ஆலயத்தில் 12.11.22 அன்று தெலுங்கானா மாநில ஊழியர் சகோ. சுகுமாரைப் பிரதிஷ்டைசெய்து அனுப்பிய அருள்திரு. தாவீது செல்லத்துரை அவர்களுக்கும் தாங்கும் விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்றிகூறுகிறோம். 20 நவம்பர் அன்று ஊத்துமலை CSI தூய பவுலின் ஆலயத்திலும், சிவந்திபுரம்-பெத்தேல் ஜெப வீட்டிலும் இடம்பெற்ற மேற்கு வங்காள ஊழியர்களின் பிரதிஷ்டை ஆராதனைகளை தேவ மகிமைக்காய் முன்னின்று நடத்திய போதகர்கள் Rev. சோல்வின் மெரிட்டர், Rev. ராஜமாணிக்கம் அவர்களுக்கும் தாங்கும் குடும்பங்களுக்கும் இயேசுவின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

22.01.2023 அன்று கர்த்தரின் மகிமைக்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆத்மீகத் தேவை நிறைந்த பீல், கோகனி, மௌச்சி இன ஜனங்கள் தேவ வசனமாகிய மன்னாவால் போஷிக்கப்படுவார்களாக; கர்த்தரின் களஞ்சியம் நிரம்புவதாக; கட்டுமானத்திற்குக் கரம்நீட்டி உதவிய கர்த்தரின் பிள்ளைகள் பெரும் நன்மைகள் காண்பார்களாக!

– ஊழியர் சுனில் துர்வே

இயேசு என் மீட்பர்

லகோலி பணித்தளத்தில் ஜீவ சாட்சியாக என்னை நிறுத்தியிருப்பது கர்த்தராகிய தேவனின் வல்ல செயலே ஆகும். மனநோயின் உக்கிரத்தால் என் அருகில் வரும் எவரையும் அடித்துத் துன்புறுத்தும் பழக்கம் என்னில் ஆண்டாண்டு காலமாய் இருந்தது! தனிமையில் புலம்புதல் என்பது எனது 52 வயது வரை நிற்கவேயில்லை.

மகேந்திரா சின்ஹா எனும் விசுவாசியின் வீட்டு ஜெபக் கூடுகைக்கு எனது மூத்த மகன் அழைத்துச் சென்றபோது அங்கே கூடியிருந்தவர்கள் என்மேல் எண்ணை பூசி இயேசுவின் நாமத்தில் ஏகமனதோடே ஜெபித்தார்கள்.

கர்த்தரின் கரம் என்னைப் பொல்லாத ஆவிகளினின்று விடுவித்தது. ஞாயிறுதோறும் லகோலி கிராமத்தில் கூடும் ஆராதனைக் குழுவில் பங்கெடுக்கிறேன். என் கண்ணில் படும் அனைவருக்கும் இதயம் மலர்ந்து நான் கூறுவதெல்லாம், 'இயேசு என் மீட்பர்' என்பதே!

– சீதா ராம் கஷியாப், சத்தீஸ்கடு.

அன்பின் பகிர்வுகள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,
இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

1983முதல் ஆண்டுதோறும் குடியரசு தின விடுமுறையில் பம்பாய் பட்டண தமிழ் விசுவாசிகள் கூடுகை இடம்பெறுகிறது. எமில் அண்ணன் தன் ஊழிய நாட்களில் தவறாமல் இக்கூடுகைக்கு வருவது வழக்கம். தேவ நடத்துதலால் 2023 ஜனவரி 25-27வரை மும்பை பட்டண ஊழியங்களுக்குச் சென்றேன். குறிப்பாக, 26 அன்று காலை முலண்ட் - மெதடிஸ்ட் திருச்சபையிலும், மாலையில் தாராவி சி.என்.ஐ. திருச்சபையிலும் சிறப்புக்கூடுகைகள் நடத்தத் தேவன் கிருபைதந்தார். மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் அருள்திரு. பிரகாஷ் காத்ரே, மகாராஷ்டிரா பணித்தள ஒருங்கிணைப்பாளர் அருள்திரு. சுனில் துர்வே, மும்பை விஷ்வவாணி ஊழியங்களில் கர்த்தர் ஆதிநாட்கள் துவக்கம் பயன்படுத்தும் சகோ. எபிநேசர் மோசஸ், சகோ. இம்மானுவேல் மற்றும் ஊழியர்கள் இக்கூடுகைகளை இயேசுவுக்கு மகிமையாய் நடத்தினார்கள். மகாராஷ்டிராவில் நம் ஊழியங்களை நினைவுகூர்ந்து, தங்களுடன் பகிர்ந்துகொள்ள என் மனதை இப்பயணம் ஏவியது!

2011ம் வருட கணக்கெடுப்பின்படி, 11 கோடி ஜனத்தொகையுடன் இந்தியாவின் 2வது பெரிய மாநிலமான மகாராஷ்டிராவில் 36 மாவட்டங்கள், 358 தாலுகாக்கள், 44,146 கிராமங்கள் உண்டு. இந்திய ஜனத்தொகையில் 65% பேர் கிராமங்களில் வசிக்கின்றனர்; ஆனால் மகாராஷ்டிராவில் 55% கிராமங்களிலும், 45% நகரங்களிலும் வாழ்கின்றனர்; 79.8% இந்துக்கள், 11.5% இஸ்லாமியர், 5.8% புத்த சமயத்தார், 1.2% ஜைனர்கள், 0.96% கிறிஸ்தவர் என கணக்கெடுப்பு கூறுகிறது. பம்பாய் பட்டணத்தில் சுமார் 5,000 யூதர்களும், 44,000 பாரசீகர்களும் உண்டு. இந்தியாவின் நிதி மற்றும் வியாபாரத் தலைநகராக பம்பாய் திகழ்கிறது.

மகாராஷ்டிராவில் நடப்பு ஊழியங்கள்:

மகாராஷ்டிராவில் விஷ்வவாணி பணித்தள ஊழியங்களில், 9 மாவட்டங்கள் - 23 தாலுகாக்கள் - 393 கிராமங்களில் 76 தள ஊழியர்களைக் கொண்டு தேவன் தாமே தமது பணியை முன்நடத்துகிறார். 7,000 கிராமங்களைச் சுவிசேஷத்தினால் சுபீட்சமாக்குவதே பணியின் தரிசனம். 300 வேதபாட வகுப்புகளும், 79 ஆராதனை குழுக்களும் தேவ ஒத்தாசையுடன் இயங்கும் மகாராஷ்டிராவில் 48 ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன; இன்றும் 2 தளங்களில் ஆலயக் கட்டுமானப்பணி நடந்தேறுகிறது. மேலும், 1.தண்டிபாடா, 2.பாஞ்ச்மெளலி, 3.தேவிசிபாடா, 4.கடோல்டி, 5.சாகர்கா, 6.சாதல்வாடா, 7.சுக்டி, 8.காரத்பாரி, 9.சாப்போலி, 10.அமிர்சா ஆகிய பத்து பணி நிலையங்களில் அதிகரிக்கும் விசுவாசிகளுக்கு ஆலயம் அவசியத் தேவை.

மும்பை - பயந்தர் எனுமிடத்தில் கர்த்தர் ஈவாய்த் தந்த விஷ்வவாணி ஜெப மையத்தில் விசுவாசிகள் கூடி, உபவாச ஜெபங்கள் ஏறெடுக்கவும் மாதாந்திர ஐக்கிய நேரங்கள் மூலம் ஊழியத்தில் ஸ்திரப்படவும் கர்த்தர்தாமே கிருபைதருகிறார், துதியுங்கள். முழு மகாராஷ்டிரா மாநிலத்திற்கும் ஆசீர்வாத நிலையமாகத் திகழ்வது, துலே ஜில்லா - லகட்வால் தளத்தில் அமைந்துள்ள நம் ஊழிய வளாகம்! ஊழியர் பயிற்சிக்கூடம், சிறுவர் பராமரிப்பு நிலையம், திறன் வளர் மையம், தேவாலயம் என இரண்டு ஏக்கர் நிலப்பரப்புடைய இவ்வளாகத்திற்கு மகாராஷ்டிராவின் தன்னார்வத் தலைவர்கள்,

பணிப்பங்காளர்கள் வந்துசெல்வதுடன், இவ்வளாக மேம்பாட்டிற்காக அதிக பிரயாசமெடுக்கின்றனர். கிராமச் சூழலில் ஊழியர் பயிற்சி இடம்பெறுகிறது; 21 சிறுவர், 15 சிறுமிகள் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர். ஒரு குழந்தைக்கு கல்வி மற்றும் உணவு வகைக்கு மாதம் ரூ. 1,500/- செலவாகுகிறது. தேவ நன்மைகள் மேலும் உங்கள் குடும்பங்களில் பெருக, ஒரு குழந்தைக்குப் பொறுப்பேற்க உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

மகாராஷ்டிர விசுவாசிகள் பாக்கியவான்கள்:

மகாராஷ்டிராவில் 9,863 சேமிப்புப்பெட்டியாளர்களும், 300க்கும் அதிகமான ஜெபக்குழுக்கள் - கிராமத் தத்தெடுப்பாளர்களுமாக இணைந்து, இம்மாநிலத்தின் ஊழியங்களைத் தாங்களே சிரமேற்று தாங்குவது தேவனுக்கு மகிமைதருகிறது! ஆலயக் கட்டுமானப்பணி, தள ஊழியர்களின் தேவைகளை அறிந்து, ஆதரிக்கும் தேவ ஜனங்களும் இங்கு அதிகம்! கர்த்தர் அவர்களுக்கு வழங்கும் ஆசிகளும் அதிகமாகவே இருக்க ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். 425 புதிய கிராமங்களுக்கு இவ்வாண்டில் ஊழியர்களை அனுப்பும் பிரயாசத்தில் கர்த்தர் மேலும் விசுவாசக் குடும்பங்களை இணைக்கும்படி தயவாய் ஜெபியுங்கள். மகாராஷ்டிராவிலுள்ள உங்களது உறவினர்கள், நண்பர்களுக்கு இப்பணியை அறிமுகம்செய்யுங்கள். திருச்சபைகள், விசுவாசக் குடும்பங்களைச் சந்தித்து, தரிசன விரிவாக்கப் பணியில் செயல்பட மகாராஷ்டிராவில் 26 முழுநேர ஊழியர்கள் உண்டு. இவர்களது பயணங்கள், அன்றாட ஊழியத்திட்டங்கள் கர்த்தரால் நிறைவேற ஜெபியுங்கள்.

மகாராஷ்டிராவில் தேவ தரிசனம் பூரணமாய் நிறைவேறுவதாக!

மும்பை - புறநகர் பகுதியான பத்லாபூரில் நமது மாநில அலுவலகம் இயங்குகிறது. வளர்ந்துவரும் ஊழியங்களையும், விரிவடையும் தளங்களையும், தரிசனத்திற்கு நேராக மேலும் துரிதப்படுத்தும்வகையில் ஊழியக் கட்டமைப்புகளுக்கு நாம் அதிக கவனம் செலுத்தவேண்டிய நாட்களிவை! மகாராஷ்டிரா - குஜராத் பிராந்திய ஒருங்கிணைப்பு மையமாக - தரிசன விரிவாக்கம், ஊழியப் பயிற்சிக்கு ஏதுவாக கடந்த வருடம் மும்பை - புறநகரில் வாங்கனி எனுமிடத்தில் நிலம் வாங்கி, பதிவு செய்யப்பட்டது. அதன் சுற்றுப்புறச் சுவர் கட்டுவதற்கு ரூ. 7 லட்சம் தேவை. மேலும், கட்டுமானப் பணிக்கான அரசு அனுமதி கிடைக்கவும், தேவையான நிதியுதவிக்கு மகாராஷ்டிர விசுவாசிகளின் ஆதரவு கிடைக்கவும் உங்கள் ஜெபங்கள் தேவை.

அதிசயமாகவும், ஆச்சர்யமாகவும் மகாராஷ்டிர மாநில ஊழியங்களை இம்மட்டும் நடத்தும் தேவன் 7000 கிராமங்களை தேவ ஈவால் நிச்சயம் நிரப்புவதை விசுவாசக் கண்களால் காண்கிறோம். திறப்பில் நிற்கும் விசுவாசிகள் பெருக - தரிசனம்மிக்க தள ஊழியர்கள் 1400 பேர் ஊழியர்களாய் இணைய - புதிய பிரதிநிதிகள் பணியில் பொறுப்பேற்க ஜெபியுங்கள், பங்கெடுங்கள்; பரலோகம் நித்தமும் நிரம்புவதாக!

"அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்; அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது. சங். 147:15

ஹைதராபாத்
14.02.2023

கிறிஸ்துவின் பணியில் உங்கள் சகோதரன்
P. செல்வராஜ், Chairman, Vishwa Vani Network

கோதுமை மணிகளின் வரிசையில்...

சாலைகள் சடுதியாய்ப் பறிக்கும் உயிர்களில் ஊழியர்களின் ஜீவன் சிக்கும்போது உண்டாகும் வியாகுலங்களும் மனக் காயங்களும் தாங்க இயலாதவை. ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளம் மாவட்டம் – பெத்த கிட்டிங்கி தள ஊழியர் சவரா கூர்மய்யா (வயது 41) என்பரும், தமரகடா தள ஊழியர் சவரா ஜோகராவ் (வயது 35) என்பவரும் 24.01.2023 அன்று இரவு இருசக்கர வாகன விபத்துக்குள்ளாயினர். நிகழ்விடத்தில் ஊழியர் கூர்மய்யாவும், மருத்துவமனையில் ஜோகராவும் மரித்து, மறுவாழ்வுக்குள் பிரவேசித்தனர்.

பாத்தபட்டணம் மண்டலத்தின் குக்கிராம ஊழியத்தை முடித்து, இரவில் இல்லம் திரும்பும் வழியில் இக்கோர விபத்து நிகழ்ந்தது. ஊழியர் கூர்மய்யா என்பார் சீப்பருகட்டி துவக்கம் பாசகிட்டங்கி வரையிலான 5 கிராமங்களிலும், ஊழியர் ஜோகராவ் என்பார் ரெங்குடா முதல் ஜன்னிகுடா வரையிலான 5 கிராமங்களிலும் சுவிசேஷகர்களாகப் பணிபுரிந்தவர்கள். இளம் வயதென்றாலும் விசுவாசத்தில் முதிர்ச்சி பெற்று, முழுநேர ஊழியத்தில் முன்நின்றவர்கள். இயேசுவுக்காக இரவும் பகலும் இயங்கியவர்கள். 'என்றும் கர்த்தாவுடன்' வாழும் பாக்கியத்தை இளமையில் பெற்றுக்கொண்டார்கள்.

ஊழியர் கூர்மய்யாவின் மனைவி திருமதி. ராஜம்மி மற்றும் மூன்று பிள்ளைகள் முரளி, ஹரியம்மா, திமோத்தி ஆகியோருக்கும், ஊழியர் ஜோகராவின் மனைவி திருமதி. காயத்திரி மற்றும் இரண்டு பிள்ளைகள் பிரேமாஞ்சலி, பிரசாந்த் ஆகியோருக்கும், சக ஊழியர்கள் மற்றும் விசுவாசக் குடும்பங்களுக்கும் கர்த்தரே ஆறுதல்செய்வாராக. தளங்களில் உழைக்கும் ஊழியர்களின் போக்கையும் வரத்தையும் இது முதற்கொண்டு என்றென்றைக்கும் கர்த்தர் பாதுகாக்கும்படி ஜெபியுங்கள்.

மேற்கு வங்காளத்தின் சிலிகுரி பிராந்தியத்திற்குட்பட்ட மத்ய செக்மாரி பணித்தள ஊழியர் சந்தோஷ் டோப்னோவின் மனைவி திருமதி. ரஞ்சு டோப்னோ (வயது 54) அவர்கள் 19.01.2023 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். கடந்த 12 வருடங்களாகத் தன கணவரது ஊழியத்தில் மிகுந்த ஒத்தாசையாக வாழந்து, கிராமங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும், விசேஷமாக சிறுவர் ஊழியங்களுக்கும் பேருதவியாகத் திகழ்ந்தவர்கள் திருமதி ரஞ்சு. போடோ, ஒராவன், நேபாளி என்று தங்கள் தள எல்கைகளில் வசித்த ஜனங்கள் மத்தியில் இச்சகோதரியின் அன்பின் சேவை துதிக்கத்தக்கது. உயர் ரத்த அழுத்தத்தினாலும் பக்கவாதத்தினாலும் வெகுவாய்ப் பாதிக்கப்பட்ட நிலையில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து, உயிர்த்தெழும் நாளுக்காக விதைக்கப்பட்டிருக்கும் அன்பு சகோதரியின் ஊழிய நாட்களை நன்றியுடன் நினைவுகூருகிறோம். ஊழியர் சந்தோஷ் டோப்னோ அவர்களையும், சஞ்சீப், காட்வின், ஹேமா ஆகிய மூன்று பிள்ளைகளையும் ஜெபத்தில் தாங்குங்கள்.

உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரம், உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம்!

- அருள்திரு. இம்மானுவேல் தானராஜ், இயக்குநர் - ஜெப ஒருங்கிணைப்பு

மீண்டும் ஒரு லெந்து காலத்தை ஆசரிக்கத் தகுதி பெற்றிருக்கிறோம். கல்வாரி சிலுவை கண்கள் முன் நிற்கின்றது. அதில் இரத்தம் சொட்டத் தொங்கும் ஓர் உருவம். தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து மனுக்குலத்தின் பாவத்தைச் சுமந்துகொண்டு தொங்கும் தெய்வம். அந்த அன்பைத் தியானிக்க கொல்கதா மலை போதாதே; கெத்செமனேக்குச் செல்லவேண்டுமே. அந்த ஒலிவ மலைத் தோட்டமும் போதாது, மேல்வீட்டறைக்கும் செல்லவேண்டுமே. அங்கு இடம்பெற்ற இராப்போசன விருந்து அந்தக் கோர கொல்கதா மலையில் இடம்பெற்ற சம்பவத்தின் மையப்பொருள் ஆயிற்றே. பஸ்காவின் ஆட்டுக்குட்டி ஒவ்வொரு வீட்டிலும் அடிக்கப்பட்டு, அதன் இரத்தம் நிலைக்காலில் பூசப்படவேண்டும் என்றும், இரத்தம் பூசப்படாத நிலைக்காலின் உள்ளே சங்காரத் தூதன் வந்து தலைச்சன்களை வாரிக்கொள்வான் என்றும் இஸ்ரவேல் மக்களுக்கு அன்று எகிப்தில் அடிமைத்தனத்தின் விடுதலை நாள் அறிவிக்கப்பட்டதே. அந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டிகள் இஸ்ரவேல் என்னும் ஓர் இனத்தாருக்கு. இங்கு மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டியாக இயேசு தொங்குவது சர்வ லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக. பஸ்கா பண்டிகையன்று அடிக்கப்படுவதற்கு முன்பாக இயேசு கூறுவதை லூக்கா 22:15ல் பாருங்கள். நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன் என்கிறார். அந்தப் பஸ்கா என்ன அத்தனை விசேஷம்?

பஸ்காவின் முக்கியத்துவம்:

திருவிருந்து, நற்கருணை, பரிசுத்தப் பந்தி, கர்த்தருடைய மேசை, கர்த்தருடைய பந்தி என்று பல வார்த்தைகளால் முக்கியப்படுத்தப்படும் இந்தத் திருச்சபையின் சாக்கிரமெந்து அல்லது ஒழுங்கு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலேயே தொடங்கப்பட்டது, நியமிக்கப்பட்டது. நான் திரும்பி வருமளவும் இதைச் செய்யுங்கள் என்று அவர் நியமித்த இந்தத் திருவிருந்து ஆராதனைகள் 'நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே' (1 கொரி. 5:7) என்ற உண்மைச் சம்பவத்தின் நினைவுகூருதல் ஆகும். 400 ஆண்டு கால எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் விடுதலைபெறும் சம்பவம் யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் இடம்பெறுகிறது. பத்து வாதைகள் எகிப்தின்மேல் அனுப்பப்பட்டது, பத்தாவது வாதையாக எகிப்தின் தலைப்பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள். சங்காரத் தூதன் அப்படி வாதையினால் வாரிக்கொள்ளும்போது இஸ்ரவேல் மக்கள் அந்த வாதைக்குத் தப்ப ஓர் மார்க்கம் கொடுக்கப்பட்டிருந்தது. அதுதான் 'பஸ்கா' ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டின் நிலைக்கால்களில். அந்த இரத்தம் பூசப்பட்ட வீட்டில் பாதுகாப்பு, அது அல்லாத வீட்டில் சாவு. அந்த அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்ன செய்யப்படவேண்டும் என்பதன் தெளிவு யாத் 12:6-11 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. அந்த பஸ்காவின் மாமிசம் புசிக்கப்படவேண்டும். அந்தப் பஸ்காவில் பங்குகொள்ளாதவன் அந்த மாபெரும் விடுதலையிலும் பங்குபெறவில்லை. அது அவர்களுக்கு ஆண்டுதோறும் நியமிக்கப்பட்ட நியமமாயிற்று. ஒவ்வொரு ஆண்டும் வேனிற்காலத்தில் 7 நாட்கள் இப்பண்டிகையை இஸ்ரவேல் மக்கள் கொண்டாடினார்கள்.

பஸ்காவின் நிறைவேறுதல்:

காலங்காலமாக இஸ்ரவேல் மக்களால் யூதர் பண்டிகையில் முக்கியமான பண்டிகையாக ஆசரிக்கப்பட்டு வந்த பஸ்கா பண்டிகை வரப்போகும் மேசியாவை எதிர்நோக்குகின்ற ஒன்றாகவும் அந்த மேசியா உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக மனிதக் குல பாவத்தின் பலியாக வந்து பாடுபட்டுச் சிலுவையில் அடிக்கப்பட்டு மரிக்கவேண்டும் என்பதை எதிர்பார்த்துக் காத்திருந்த ஒன்றாகவும் இருந்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாடு மரணத்தில் அது நிறைவேறிற்று. பழுதொன்றும் இல்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக – சர்வலோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக இயேசு வந்தார் (யோவான் 1:29-34) என்று அவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் அறிக்கையிடுகிறார். பஸ்காவின் ஆடாக இயேசு பஸ்கா பண்டிகையில் எருசலேமின் வெளியே அடிக்கப்படுவது அதன் நிறைவேறுதலாக இருக்கிறது. இயேசுவே மெய்யான பலியாக மரித்தார் என்பது உண்மை. அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது. ஆனால் அந்த ஆட்டுக்குட்டியின் மாம்சம் என்ன செய்யப்பட வேண்டும்? அதைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது.

உங்களுக்காகப் பிட்கப்படுகிற என் சரீரம்:

யாத். 12ம் அதிகாரத்தில் அந்தப் பஸ்காவானது எப்படிப் புசிக்கப்படவேண்டும் என்று பார்க்கிறோம் அல்லவா! அங்கு 8ம் வசனத்தில் அன்று இராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள் என்றும் அதிலே ஒன்றையும் மீதியாக வையாமல், விடியற்காலம் மட்டும் மீதியாய் இருக்கிறதை அக்கினியினால் சுட்டெரிப்பீர்களாக என்றும் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் நமக்கு மெய்வாழ்வு தரும் உணவு. அது உட்கொள்ளப்படவேண்டும். அதைத்தான் பஸ்கா ஆடாக அடிக்கப்பட்ட இயேசு கிறிஸ்து தமது இறுதி விருந்தில் நியமமாக ஏற்படுத்துகிறார். மத்தேயு 26:26-28 வசனங்களைப் பாருங்கள். மேலும் 1 கொரி. 11:23-28 வசனங்களையும் பாருங்கள். உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரம் என்று தன் சரீரத்தை எடுத்துக்கூறுகிற இயேசு, நான் திரும்ப வருமளவும் தன்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று அப்பத்தையும் திராட்சரசத்தையும் நினைவுபொருட்களாக்குகிறார். நீங்கள் இந்தத் திருவிருந்தில் பங்குகொள்ளும் பொழுதெல்லாம் 'என்னை நினைவுகூரும்படி' இதைச் செய்யுங்கள் என்கிறார். என்ன நினைவுகூருகிறோம்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்று நினைவுகூருகிறோம். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை அறிக்கையிடுகிறோம். அவர் திரும்பி வரப்போகிறார் என்று காத்திருக்கிறோம்.

நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம்:

இயேசு ஐயாயிரம் பேரைப் போஷித்த சம்பவம், யோவான் 6ம் அதிகாரத்தின் முதல் 13 வசனங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் மீதமுள்ள 58 வசனங்களும் எதைக் குறிப்பிடுகிறது? மெய்யான போஜனத்தைக் குறித்துக் கூறுகிறது. இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் வானத்திலிருந்து வந்த மன்னாவைப் புசித்தார்கள். அது வயிற்றுப் பசி ஆற! ஆனால் மெய்வாழ்வு தரும் நித்திய ஜீவனைக் கொடுக்கும் 'ஜீவ அப்பம் நானே' என்று இயேசு கூறுவதைப் பாருங்கள் (வசனம் 35). நானே வானத்திலிருந்து வந்த மெய்யான மன்னா என்று இயேசு தெளிவுபடுத்துவது மட்டுமல்ல, இந்த அப்பத்தைப்

புசிப்பவன் ஒருக்காலும் பசியடையான் என்று தெளிவுபடுத்துகிறார். அந்த ஜீவ அப்பமாகிய இயேசுவை எப்படி உண்பது? அவர் சரீரத்தை எப்படி உண்பது? திருவிருந்தில் ஒரு அடையாளமாக நாம் உட்கொண்டாலும் அதன் உண்மை பொருள் என்ன? விசுவாசத்தினால் அவரை ஏற்றுக்கொள்ளுவதே ஆகும். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன் (வசனம் 54) என்பதைக் கவனியுங்கள். என் மாம்சம் மெய்யான போஜனம்... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னில் நிலைத்திருக்கிறான் என்று கூறுவதன் பொருள் என்ன? மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு தேவனுடைய வார்த்தையாயிருக்கிறார். அவருடைய வார்த்தை நமக்குள் நிலைத்திருந்தால் அதுவே மெய்வாழ்வு, நித்திய ஜீவன். வானத்திலிருந்து இறங்கிவந்த அந்த ஜீவ வார்த்தையை எவ்வளவு அதிகம் உட்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கதிகம் நித்திய ஜீவன் நம்மில் பெலன் செய்யும்.

கர்த்தரின் பந்தியில் வா, சகோதரா, கர்த்தரின் பந்தியில் வா...
ஜீவ அப்பம் அல்லோ, கிறிஸ்துவின் திருச்சரீரம் அல்லோ,
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ தின்று அவருடன் என்றும் பிழைத்திட
கர்த்தரின் பந்தியில் வா! ■

சுபிட்சத்தின் மார்க்கம் சத்திய வசனம்

கூக்னா எனும் ஜனக் கூட்டத்தோடு தோர்பாடாவில் வசிக்கும் என்னை நம்பியிருந்த மனைவி, மூன்று பிள்ளைகளும் வறுமையிலும் வருத்தத்திலும் அகப்படக் காரணமாயிருந்தது என் மிதமிஞ்சிய போதைப் பழக்கம். என் போன்ற குடும்பத் தலைவர்களால் நிம்மதிக்குத் தூரமான குடும்பங்கள் எங்கள் கிராமத்தில் ஏராளம்.

மதுவை மறப்பது எப்படி? குடும்ப மகிழ்ச்சிக்கு வழி எது? சுபிட்சத்தின் மார்க்கம் என்ன என்பதை எங்கள் கிராமத்தில் முதன்முறையாய் அறிவித்தவர் ஊழியர் மகேஷ்பாய் மால்வி. அவரது ஆலோசனைகளில் மனம் பதித்தபோது, மதுவை என் மனம் மறுத்தது! வேதப் புத்தகம் என் உள்ளத்தையும் எங்கள் குடும்பத்தையும் சமாதானத்தில் தங்கவைத்தது! ஒருவேளை உணவுக்குக்கூட திண்டாடிய துயரக் காலங்கள், இன்று பிறரைப் போஷிக்குமளவுக்கு உயரம் கண்டிருப்பது இயேசு என்னும் இரட்சகரின் புண்ணியமே! – புதிய விசுவாசி போலாபாய் மால்விஷ், குஜராத்.

சமர்ப்பண் பத்திரிகைக்குச் சந்தா செலுத்திவிட்டீர்களா?

மாதந்தோறும் விஷ்வவாணி ஊழிய விபரங்களை உங்கள் இல்லங்களுக்குச் சுமந்து வரும் சமர்ப்பண் பத்திரிகைக்குத் தங்கள் வருடாந்திர சந்தாவைச் செலுத்தும்படி பணிவன்புடன் நினைப்பூட்டுகிறோம். உங்கள் இல்லங்களுக்கு வரும் ஊழியர்கள், பிரதிநிதிகளிடம் அல்லது ஆன்லைன் மூலமாகச் செலுத்தி, இரசீது பெற்றுக்கொள்ளுங்கள்.

A/C Name: **VISHWA VANI SAMARPAN** Branch: **ANNANAGAR WEST, CHENNAI**
Bank: **STATE BANK OF INDIA** Branch Code: **03870**
A/C No.: **1040 845 3024**
IFSC Code: **SBIN0003870**

இரசீது அனுப்புவதற்கு உதவியாக, தயவுகூர்ந்து தங்கள் முகவரியைத் தெரிவியுங்கள். ✆ 044-26869200

பணித்தளச் செய்திகள்

ஸ்தோத்திரமும் வேண்டுதலும்

ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்குப் பயப்படவேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக. நெகேமியா 1:11

01 ஜம்மு காஷ்மீர் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 225**

ரிதியான் எனுமிடத்தில் பாவ அறிக்கை செய்த 20 பேர் கிறிஸ்து இயேசுவைப் பற்றிக்கொண்டனர். குருவால் தளத்தில் 4 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர். கரியல் கிராமத்தில் தெபோராள் ஐக்கியம் துவங்கியது. படிபிராம்னாவில் ராஜன் வீட்டாரனைவரும் கர்த்தரை அறியும் அறிவில் வளருகின்றனர், துதியுங்கள்.

துனாசாக் தளத்தில் முதன்முறையாய்ச் சுவிசேஷம் கேட்ட 18 பேரின் மறுவாழ்வுக்காக... ஊழியர் அல்கோஷியின் தகப்பனார் கழுத்து எலும்புகளின் தேய்மானத்தால் அவதியுறுகிறார். லாலி பிராந்தியத்தில் ஊழியத்திற்கான அநுகூல வாசல் திறக்கப்பட... சஞ்ச்வாலி மண்டியில் கர்த்தர் தந்த புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... ஜெபியுங்கள்.

02 இமாச்சலப் பிரதேசம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 223**

80 கிராமங்களில் பாவமன்னிப்பின் செய்தி எடுத்துரைக்கப்பட்டது. கீனா தளத்தில் ஆலயக் கட்டுமானப்பணி நிறைவடைந்தது. கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்த 20 பேர் தேவ அன்பில் வளருகின்றனர். 12 இளைஞர்கள் முழுநேரப் பணிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துள்ளனர், துதியுங்கள்.

பரோட், கெத்தா ஆகிய தளங்களின் விசுவாசிகள் மூலம் அண்டை கிராமங்கள் வெளிச்சம் பெற... சிலாலா தளத்தில் நடந்தேறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... 223 கிராமங்களில் பணிபுரியும் நம் ஊழியர்களைக் கர்த்தர் தமது மகா வல்லமையுடன் முன்நடத்த... ஆராதனைக் குழுக்களில் புதிதாகப் பங்கெடுக்கும் 55 குடும்பங்களும் தேவ வசனங்களில் ஸ்திரப்பட... ஜெபியுங்கள்.

03 பஞ்சாப் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 263**

வாலிபர் முகாமில் இயேசுவுக்குத் தங்களைச் சமர்ப்பித்த 30 இளைஞர்களுக்காக ஸ்தோத்திரம். பாவ அறிக்கை செய்த 32 பேரும் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டனர். தேடுவோர் கூட்டங்கள் வாயிலாகத் தொடப்பட்ட 65 ஆத்துமாக்களும் இரட்சிப்பின் அனுபவம் பெற்றனர். மகால் தல்வண்டியில் கர்த்தரின் ஜனங்கள் பெருகக் காண்கிறோம், ஸ்தோத்திரம்.

மௌர்மண்டி விசுவாசிகள் கூடி ஆராதிக்க ஏற்றதோர் இடம் தேவை... நிமோனியாவினால் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர் சாம் என்பாரின் சிறுமகனுக்காக... "55 புதிய ஊழியர்கள்" எனும் இவ்வாண்டின் ஊழியத் திட்டம் கர்த்தரால் நிறைவேற... சுவிசேஷப் பணியில் இணைய முன்வந்துள்ள 20 இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்கப்பட ஜெபியுங்கள்.

04 உத்தராகாண்ட் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 210**

முதன்முறையாகச் சுவிசேஷம் அறிந்த 203 ஆத்துமாக்களுக்காக ஸ்தோத்திரம். ஆனேகி, பாத்ஷாபூர் ஆகிய கிராமங்களின் ஜனங்கள் நற்செய்திக்கு மிகுந்த ஆர்வம் தெரிவித்துள்ளனர். 10 வருடங்களுக்குப் பின் கர்ப்பத்தின் கனி பெற்ற சோனியா குடும்பம் மோதிச்சூர் விசுவாசிகளுடன் கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. தேடுவோர் முகாம்களில் 27 பேர் தங்கள் உள்ளங்களை இயேசுவுக்கு அர்ப்பணித்துள்ளனர்.

ஆராதனைக் குழுக்களில் துவங்கிய வேதாகமத் தேர்வுகள் மூலம் விசுவாசிகள் வசனங்களில் வேரூன்ற... உத்தர்காசி பகுதியில் பணித்தளம் திறக்கும் முயற்சியைத் தேவன் கைகூடிவரப்பண்ண... பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர் சஞ்சய் சந்தின் தாயாரின் நற்சுகத்திற்காக... பர்தீத் நகர் தள விசுவாசிகள் கூடும் முழு இரவு ஜெப ஐக்கியத்தில் கர்த்தர் தமது வல்லமையை வெளிப்படுத்த ஜெபியுங்கள்.

05 ஹரியானா **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 90**

புதிய விசுவாசி சலாமத் தன் வீட்டைச் சுவிசேஷ வேலைக்கெனத் திறந்தளித்தார். ஜாடுலா கிராம ஊழியங்களில் சுனில் குடும்பம் சமாதானப் பாத்திரமாய்த் திகழ்கிறது. சஹா விசுவாசிகள் ஐக்கியத்தில் 4 புதிய குடும்பங்கள் இணைந்துள்ளன. அசவார்பூர், ஜெகதீஷ்பூர் ஆகிய இடங்களில் வசனம் செல்லும்படியான அனுகூல வாசலைக் கர்த்தர் திறந்தார், ஸ்தோத்திரம்.

முழுநேர ஊழியப் பயிற்சியில் இணைய 7 இளைஞர்கள் காத்திருக்கின்றனர். பட்லா, லீவன் ஆகிய கிராமங்களில் வசனங்கேட்டோர் உள்ளம் புதிதாக... கொரோனா தொற்றின் நிமித்தம் பெலவீனமாயுள்ள ஊழியர் பிரகத் மசீ கர்த்தரால் புதுபெலன் பெற... சிறுவர் வகுப்புகளில் மனன வசனம் கற்றுவரும் 59 பிள்ளைகளையும் தேவன் சகல ஞானத்திலும் நிரப்பி, வருங்காலங்களை ஆசீர்வதிப்பாராக.

06 டெல்லி **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 11**

இயேசுவைப் பற்றும் விசுவாசத்துடன் 3 புதிய குடும்பங்கள் மதன்பூர் ஆராதனைக் குழுவில் பங்கேற்கின்றன. பிரியங்கா கேம்ப், சரிதா விஹாரில் வேதபாட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடுங்குளிரில் வசித்த 15 குடும்பங்களுக்குக் குளிராடைகள் வழங்கும் தருணம் தேவனால் கிடைத்தது. நற்செய்திப் பிரதிகள், பரிசுத்த வேதாகமம் பெற்றுக்கொண்ட 27 பேரின் வசன வாஞ்சைக்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தண்டுவட அறுவை சிகிச்சைக்குட்பட்ட பிரியான்சு எனும் 11 வயது சிறுவனுக்குக் கர்த்தர் பூரண சுகம் தர... கணவரை இழந்த நிலையில் ஏற்ற வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் லலிதா பிரசாத் என்பாருக்காக... விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் பங்கெடுக்கும் 12 பேருக்காக... கௌதம் எனும் புதிய விசுவாசியின் சாட்சியினால் அநேகர் நீதிக்குட்பட... ஜெபியுங்கள்.

07 ராஜஸ்தான் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 419**

18 பேர் தங்கள் புதுவாழ்வைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர். புத்தாலயம் கட்டப்படும் பலியகேடா தளத்தில் விசுவாசிகளின் ஊழிய தாகம் அதிகரித்துள்ளது. புரகுவா கிராமத்தில் 10 ஆண்டுகளாகப் பிசாசினால் அலைக்கழிக்கப்பட்ட காந்தாவைக் கர்த்தர் விடுவித்தார். கர்சனாவில் கிமலி குடும்பம் கர்த்தருக்குச் சாட்சி பகருகின்றது, ஸ்தோத்திரம்.

மனாஸ் தளத்தில் வாக்டி ஜனங்களுக்கு இடம்பெறவுள்ள மேளாவின் ஆயத்தப்பணிகளுக்காக... குடிப்பழக்கத்திற்கு இரையான உம்மேத்கரி கிராம ஜனங்கள் நற்செய்தியினால் மீட்கப்பட... சரும வியாதியினால் தலைகுனிந்து வாழும் சுக்ராம் இயேசுவின் தொடுதலைப் பெற... அபாபுரா, பகிதோரா ஆகிய தாலுகாக்களில் தள ஊழியங்கள் ஸ்திரப்பட... ஜெபியுங்கள்.

08 உத்தரப்பிரதேசம் – போஜ்புரி பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 302**

மகாவால்பூர் தள ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை கர்த்தருக்கு மகிமைசேர்த்தது. மூளை கட்டியினால் உயிருக்குப் போராடிய சுஷ்மா தேவி இயேசுவின் தொடுதலைப் பெற்றார். பான்டேபூரில் ஆலயக் கட்டுமானப்பணி தேவத் திட்டப்படி நடந்தேறுகிறது. மெகாவாய்ஸ் எனும் வேதபாட ஒலிப்பெட்டியின் உதவியுடன் 302 கிராமங்களில் தேவ வசனங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன, துதியுங்கள்.

சுராசி, திவாரிபூர் ஆகிய தள விசுவாசிகளின் ஊழிய ஈடுபாட்டினால் அண்டை கிராமங்கள் வெளிச்சம்பெற... சிங்பூரில் பெருகும் விசுவாசிகளின் ஐக்கியத்திற்கு ஆலய நிலம் வாங்கப்பட... லோத்தா தளத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு, கிராம ஜனங்களின் தண்ணீர் தேவை சந்திக்கப்பட... '60 புதிய ஊழியர்கள்' எனும் இவ்வாண்டின் ஊழியத் திட்டம் கர்த்தரால் நிறைவேற ஜெபியுங்கள்.

09 உத்தரப்பிரதேசம் – லக்னோ பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 210**

3 புதிய ஆராதனைக் குழுக்களைத் துவங்கவைத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 8 வருடங்களுக்குப் பின் குழந்தைப் பாக்கியம் பெற்றுள்ள அம்ரித்தா தேவி மூலம் இயேசுவுக்கு மகிமை பெருகுகிறது. அவதி ஜனங்கள் வசிக்கும் தளங்களில் 50 குடும்பங்களுக்கு குளிர் ஆடைகள் வழங்கிய விசுவாசிகளுக்காக ஸ்தோத்திரம். கர்த்தருக்குள் புதுவாழ்வு துவங்கிய 4 குடும்பங்கள் தங்கள் சாட்சியினால் அநேகரை நீதிக்குட்படுத்துகின்றனர், துதியுங்கள்.

சமர்சேபூர் பகுதியில் தேவ ஊழியங்கள் தடைகளைச் சந்திக்கிறது... மச்சேதீயாவில் தையற்பயிற்சி வகுப்புகள் துவங்கப்படவிருக்கிறது... புதிய விசுவாசிகளுக்கு 100 வேதாகமங்கள் தேவை... புற்றுநோயுடன் போராடும் பூபேந்திரா குமாரின் மறுவாழ்வுக்காக ஜெபியுங்கள்.

10 பீஹார் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 195**

7 கிராமங்களில் நடத்தப்பட்ட இளைஞர் கூடுகைகளில் 150 வாலிபர்கள் தங்கள் வருங்காலங்களை இயேசுவுக்குத் தத்தம் செய்தனர். மொகிதீன்பூரில் ஆராதனைக் குழு புதிதாக உருவாகியுள்ளது. 15 பேர் தங்கள் புதிய விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர். தேடுவோர் முகாம்களின் பயனாக 1456 பேர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்தனர், ஸ்தோத்திரம்.

எஸ்றா முகாம்களில் தெரிவுசெய்யப்பட்டுள்ள 52 இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்கப்பட... தள ஆய்வின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ள 250 கிராமங்களில் ஊழியம் துவங்கும் தேவையைக் காண்கிறோம். ஒசியன் கிராமத்தில் தெபோராள் குழுவினராகக் கூடும் 75 சகோதரிகள் நடுவில் சுவிசேஷ பாரம் காண்கிறோம். ருபாஸ்பூரில் வாலிபர்களை முகாம் மூலம் ஒன்றுகூட்டவும், இயேசுவுக்குள் திடப்படுத்தவும் முயற்சிக்கிறோம், ஜெபியுங்கள்.

11 ஜார்க்கண்டு **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 297**

மனாட்டு தளத்தின் வாலிபர் முகாம் 100 இளைஞர்களை இயேசுவுக்குள் பெலப்படுத்துகிறது. 9 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டு, சாட்சி பகர்ந்தனர். 35 கிராமங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்கள் மூலம் புதிய தொடர்புகளைத் தேவன் தந்துள்ளார். சுவிசேஷம் கேட்ட இளைஞன் உபேந்திரா ஒராவன், மதுப்பழக்கத்திற்கு முற்றுப்புள்ளியிட்டு, போகல்திக்ரா கிராம வேதபாட வகுப்பில் பங்கெடுக்கின்றான், துதியுங்கள்.

மாங்ரா, போடோ ஆகிய இடங்களில் காணப்படும் அந்தகாரக் கிரியைகளைக் கர்த்தர் அதமாக்க... தராசி கிராம ஜனங்களின் வாழ்வாதாரம் உயர... மனநோயினால் குடும்பத்திற்குப் பெரும் துயரங்களைக் கொடுக்கும் யசோதா தேவிக்குத் தேவன் மறுவாழ்வு கொடுக்க... குடுக், முண்டாரி ஜனங்கள் நடுவில் இடம்பெறவுள்ள விசுவாச அறிக்கை ஆராதனைக்கு 100 பேர் ஆயத்தப்படுகின்றனர், ஜெபியுங்கள்.

12 சிக்கீம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 99**

இயேசுவில் தங்கள் பாவங்களை அறிக்கைசெய்த 353 பேருக்காக ஸ்தோத்திரம். கர்ப்பத்தின் கனிபெற்ற மியாக்வாங் – பீர்கா லிம்பூ தம்பதியர் கிறிஸ்துவுக்குச் சாட்சிபருகின்றனர். ஏற்ற வேலைவாய்ப்பு கிடைத்த பிவீக் ராய் மூலம் முழுக் குடும்பமும் தேவனை மகிமைப்படுத்துகிறது. இயேசுவுக்காய் வாழும் தீர்மானத்துடன் 8 புதிய குடும்பங்கள் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்துள்ளன, துதியுங்கள்.

விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்த வகுப்புகளில் 54 பேர் பங்கேற்கின்றனர். தளங்களில் இயங்கும் 56 வேதபாட வகுப்புகளும் ஆராதனைக் குழுக்களாய் மலருவதாக... பூட்டியா, லெப்சா ஜனங்கள் மத்தியிலிருந்து தேவன் 20 ஊழியர்களை எழுப்பித் தர... ஊழியர் பீட்டர் லெப்சாவின் ஊழிய எல்கைகளில் கர்த்தர் சமாதானப் பாத்திரர்களைத் தர... ஜெபியுங்கள்.

13 அசாம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 275**

நதுன் பஜார் பகுதியில் 10 குடும்பங்கள் சுவிசேஷத்தினால் தேவ சமாதானம் பெற்றுள்ளன. சமகுரியில் நற்செய்தி செல்லும் வாசலைக் கர்த்தர் திறந்தார்; 127 பேருக்கு சுவிசேஷப் பிரதிகள் வழங்கப்பட்டன. தங்டோல் கிராமத்தில் 3 குடும்பங்கள்

விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாயினர். லவுரிபாரா, பார்பாராவில் வசனம் கேட்டோர் மீண்டும் கேட்கும்படி அழைப்பு விடுத்துள்ளனர், துதியுங்கள்.

பட்டிடோஹா கிராமத் தலைவரின் மனதில் பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்ய... ஆறு பணித்தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானப் பணிகளின் நிறைவுக்காக... ஜம்தா போரா என்பாரின் மதுப்பழக்கத்தினால் குடும்பத்தினர் வறுமையில் வாடுகின்றனர்... யானைகளால் சூறையாடப்பட்டு, இல்லங்களை இழந்து தவிக்கும் ஹெமாய் லேதே கிராம ஜனங்களுக்கு அடிப்படை வசதிகள் கொடுக்கப்பட வேண்டும், ஜெபியுங்கள்.

14 மணிப்பூர் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 335**

ஆறு மாதங்களாகப் பக்கவாதப் படுக்கையிலிருந்த ரோஷினிக்கு இயேசுவின் நாமத்தில் சுகம் கிடைத்தது. மதுப்பழக்கத்திலிருந்து மனந்திரும்பிய இளைஞன் அமன், தன் நண்பர்களுடன் சாட்சி பகருவதில் முன்நிற்கிறான். நய்ரன்சேனா விசுவாசிகள் ஐக்கியத்தில் 5 புதிய நபர்கள் இணைந்துள்ளனர். 3 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

5 கிராமங்களில் துவங்கப்பட்டுள்ள வேதபாட வகுப்புகள் மூலம் கர்த்தரின் வசனங்கள் தீவிரித்துச்செல்ல... சுவிசேஷப் பணிகள் இடம்பெறும் 335 கிராமங்களிலும் ஆராதனைக் குழுக்கள் உருவாக... குனோவ் கிராமத்தில் ஊழியங்களுக்கு எதிராய் எழும்புகிறவர்களைத் தேவன் சந்திக்க... விசுவாசத்தின் நிமித்தம் இன்னல்களை எதிர்கொள்ளும் சுபாஷ் கார்கி என்பாருக்கு கர்த்தரின் பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.

15 திரிபுரா **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 520**

கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை அறிக்கைசெய்த 26 பேருக்காக ஸ்தோத்திரம். பாது சந்திரகாமி ஆராதனைக் குழுவில் 4 பேர் புதிதாய் இணைந்துள்ளனர். காக்சங் தெபர்மா எனும் 7 வயது சிறுவனின் சுவாச உறுப்புகள் ஜெபத்தினால் சீரானது; குடும்பமும் தேவ அற்புதம் கண்டது. 5 பணித்தளங்களில் தேவாலயக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து, பிரதிஷ்டை ஆராதனைக்கான ஆயத்தங்கள் இடம்பெறுகிறது, துதியுங்கள்.

முழுநேர ஊழியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 30 இளைஞர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட... விசுவாச அறிக்கை ஆராதனையில் பங்கெடுக்கும் 57 பேரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... தேவனை ஆராதிக்கும் ஜனங்கள் அதிகரிக்கும் 9 கிராமங்களுக்கு ஆலயம் தேவை... சொர்துங்பாரா கிராம விசுவாசிகளின் ஊழிய வாஞ்சையால் அண்டை கிராமங்கள் வெளிச்சம் பெற... ஜெபியுங்கள்.

16 ஒடிசா – ஹோ, சந்தாலி **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 306**

மதியாசாகி, சாரங்காட் ஆகிய கிராமங்களில் கர்த்தர் தந்த ஊழிய வாய்ப்புகளுக்காக ஸ்தோத்திரம். பெனகாடியாவில் 3 குடும்பங்கள் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்துள்ளன. பாத்கூஷ்பாடாவில் நடத்தப்பட்ட விசுவாச அறிக்கை ஆராதனையில் 5 பேர் கிறிஸ்துவில் புதுசிருஷ்டியாயினர். சகுலியா ஊரார் சுவிசேஷம் கேட்பதில் மனோற்சாகம் கொண்டுள்ளனர், ஸ்தோத்திரம்.

பிமலாகாட் ஆராதனைக் குழுவினருக்கு ஆலயம் கட்டும் பிரயாசங்களுக்காக...

கஜுரிபாடாவில் பிசாசினால் அலைக்கழிக்கப்படும் ராதாசோரன் இயேசுவின் நாமத்தில் விடுதலையடைய... மஷினா பில்லா கிராமத்தாரின் பொருளாதார நிலை உயர... 63 ஊழியர்களைக் கொண்ட ஹோ, சந்தாலி பகுதியில் பணிபுரிய மேலும் 20 ஊழியர்கள் இவ்வாண்டில் தேவை, ஜெபியுங்கள்.

17 ஒடிசா – கந்தமால் மாவட்டம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 186**

பந்துலி பகுதியில் காணப்பட்ட ஊழியத் தடைகள் கர்த்தரால் விலகியது. மகசிங் தளத்தில் ஆலயம் கட்டுவதற்குத் தங்கள் நிலத்தை அன்பளிப்பாக்கிய விசுவாச வீட்டாருக்காக ஸ்தோத்திரம். 30 பேர் தங்கள் பாவங்களை இயேசுவிடம் அறிக்கைசெய்து, புதுஜீவியம் துவங்கியுள்ளனர். பாதுலியில் வேதபாட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது, ஸ்தோத்திரம்.

சாயின்பாடா தள விசுவாசிகள் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனைக்கு ஆயத்தமாகுகின்றனர். மாதங்கி, ஜுரிகுபாடா பிராந்திய ஊழியர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் தேவை. விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் 15 பேர் பங்கேற்கின்றனர். ஊழியர் கோபால் பெஹரா, அபனிகாந்தா திகல் ஆகியோரின் ஊழியக் கிராமங்களில் கர்த்தர் ஆத்துமக் கனிகளைப் பெருகச் செய்ய ஜெபியுங்கள்.

18 ஒடிசா – ராயகடா மாவட்டம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 333**

அர்மோடா தள விசுவாசிகளில் 38 பேர் உபவாசித்து ஜெபிப்பதில் மனோவாஞ்சை கொண்டு ஜெபித்து வருகின்றனர். தேமோகுடா ஆராதனைக் குழுவில் 3 புதிய குடும்பங்கள் பங்கெடுக்கின்றனர். ஊழியர் கமியல் படா ராய்தாவின் திருமண ஆராதனை சுவிசேஷப் பிரபல்யத்திற்கு ஏதுவாயிருந்தது. டங்கரியா கந்தா ஜனங்கள் வசிக்கும் ராணிபன்டா எனுமிடத்தில் பணித்தள ஊழியம் துவங்கப்பட்டுள்ளது, துதியுங்கள்.

கினிடி கிராமத்தில் கர்த்தரின் வசனம் கேட்ட ஜனங்கள் மனந்திரும்ப... உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஜெயபா ராய்தாவின் நற்சுகத்திற்காக... டோலம் கிராமத்தின் முதல்தலைமுறை விசுவாசிகள் எதிர்கொள்ளும் இன்னல்களினின்று கர்த்தர் விடுவிக்க... கோர்னிபத்ராவில் துவங்கிய கர்த்தரின் சபைக்குக் கட்டட வசதி தேவை, ஜெபியுங்கள்.

19 ஒடிசா – சம்பல்புரி **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 154**

16 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர். ஜானகி ஜாரா குடும்பத்திற்குக் கர்த்தர் கர்ப்பத்தின் கனி தந்தார். ஜோஸ்தனா மகானந்த் என்பாரின் கணவரைக் குடிப்பழக்கத்திலிருந்து கர்த்தர் விடுவித்தார். பாபுபந்த் தளத்தில் தேவாலாயக் கட்டுமானப் பணிக்கான ஆயத்தப்பணிகள் நிறைவடைந்தது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஊழியர் அசேஷா பிடிகாவின் தாயார் புற்றுநோயினால் அவதியுறுகிறார்... பந்தாபாடாவில் ஊழியத்திற்கான அநுகூல வாசலைக் கர்த்தர் கட்டளையிட... கதுல் கிராமத்தில் விதைக்கப்பட்ட வேத வசனங்கள் கிரியைசெய்ய... தார்பா தளத்தில் கட்டப்படும் ஆலயத்தின் நிறைவுபணிகளுக்காக... ஜெபியுங்கள்.

20 சத்தீஸ்கடு – ராய்ப்பூர் பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 97**

சர்சிவா தளத்தின் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் பங்கேற்ற 350 விசுவாசிகள்

மூலம் இயேசுவுக்குத் துதிகள் பெருகியது. அபன்பூரில் நடத்தப்பட்ட சுகாதார விழிப்புணர்வு முகாம் 100 பேருக்குப் பயனளித்தது. 30 கிராமங்களில் துவங்கப்பட்டுள்ள "பயிற்சி-முதிர்ச்சி-வளர்ச்சி" வகுப்புகளால் வசனங்கள் தீவிரித்துச் செல்லுகிறது. சுவிசேஷம் கேட்ட பஜரங், போதைப் பழக்கத்தைவிட்டு மனந்திரும்பினார், துதியுங்கள்.

அஜய் சௌகான் எனும் 22 வயது இளைஞன் மனநோயினால் அவதியுறுகிறான். இடுப்பு எலும்புகளின் பாதிப்புகளால் ஊழியர் தயாசாகர் பெரும் வேதனைகளைச் சந்திக்கிறார்... சரங்கர்-பிலாய்கர் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் இன்னும் தேவை... சபை மூப்பர்கள், போதகர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் ராய்ப்பூர் பணி மையத்தில் இடம்பெறவுள்ளது, ஜெபியுங்கள்.

21 சத்தீஸ்கடு – சம்பா பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 228**

இரு மாதங்களாக திராட் பாயை அலைக்கழித்த அசுத்த ஆவி இயேசுவின் நாமத்தில் விலகியது. தேடுவோர் முகாம்களின் பலனாக 288 பேர் முதன்முறையாய்ச் சுவிசேஷம் அறிந்தனர். 24 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர். ஊழியர் ஜெயப்பிரகாசை சிறைவாசத்திலிருந்து தேவன் விடுவித்தார், துதியுங்கள்.

ரிஸ்தா தளத்தில் வேதபாட வகுப்பு துவங்கும் பிரயாசங்களுக்காக... கோர்பா, சக்தி மாவட்டங்களில் தொடரும் தள ஆய்வுப் பணிகளுக்காக... சர்வானி கிராமத்தில் ஆராதனைக் குழு துவங்க ஏற்ற இல்லம் தேவை... பக்கவாதத்தினால் வலதுபுற உறுப்புகள் செயலிழந்த லேக்ராம் என்பாருக்கு இயேசுவின் தொடுதல் தேவை, ஜெபியுங்கள்.

22 மத்தியப்பிரதேசம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 314**

20 பேர் கிறிஸ்துவில் பெற்ற தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். இம்லிபாடா கிராமத்தில் 12 வருடங்களுக்குப் பின் குழந்தைப் பாக்கியம் பெற்ற முன்முன் வீட்டார் தேவனை மகிமைப்படுத்துகின்றனர். பக்கவாதத்திலிருந்து எழுந்த ராகேஷ் இயேசுவுக்குச் சாட்சி பகருகிறார். கடிகம்னா கிராமத்தில் நிலேஷ் வீட்டாரைச் சமாதானப் பாத்திரமாய்ப் பெற்றோம், ஸ்தோத்திரம்.

தின்டோரி ஜில்லாவில் சுவிசேஷ வேலைக்கான அநுகூல வாசலைக் கர்த்தர் கட்டளையிட... விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்த வகுப்புகளில் 673 பேர் பங்கேற்கின்றனர். பிசாசின் பிடியிலுள்ள ராஜாராம் இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற... விசுவாசிகள் ஐக்கியத்தில் புதிதாகப் பங்கேற்கும் மாதுரி, ஹரி ஆகியோரின் சாட்சியினால் வீட்டாரனைவரும் மறுபிறப்பின் அனுபவம் காண ஜெபியுங்கள்.

23 குஜராத் – பரூச் மாவட்டம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 130**

புலேஸ்வர் கிராமத்தின் தேடுவோர் கூடுகையில் பங்கேற்றோர் நடுவில் நற்செய்தி தாகம் கண்டோம். டோலத்பூர் விசுவாசிகள் ஐக்கியத்தில் இரு குடும்பங்கள் இணைந்துள்ளன. சாலை விபத்திலிருந்து ஜீவன் பிழைத்த அர்பன்பாய் கர்த்தருக்குச் சாட்சிபருகிறார். பில்வாடா, துனா ஆகிய கிராமங்களில் ஊழியங்களுக்குப் புதிய தொடர்புகளைத் தரும் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தீ விபத்தில் காயமுற்ற அசுபேனின் காயங்களைக் கர்த்தர் சுகப்படுத்த... பாத்குவா கிராம விசுவாசிகள் நடுவில் சுவிசேஷ வேலைக்கான வாஞ்சை பெருக... பேசும்-கேட்கும் திறன் இழந்துள்ள லக்ஷ்மி பேன், திவ்யா பேன் ஆகியோருக்குத் தேவன் இரங்க... வல்போர், போர்சாட் பிராந்தியங்களிலிருந்து முழுநேர ஊழியர்கள் எழும்ப... ஜெபியுங்கள்.

24 குஜராத் – நர்மதா மாவட்டம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 92**

திவ்தான் கிராமத்தில் கர்த்தரின் சபை உதயமானது. 14 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர். சோரபாடாவில் இரு நாட்களாக மயக்க நிலையிலிருந்த ஹஜிந்தராபாய் தேவனால் சுகம்பெற்றார். விஷப் பாம்புக் கடியிலிருந்து உயிர்பிழைத்த வங்கரன்பாய் மூலம் இயேசுவின் நாமம் மகிமையடைகிறது, ஸ்தோத்திரம்.

சுகாம்பா பகுதி விசுவாச இளைஞர்களின் உள்ளங்களில் ஊழிய பாரம் உருவாக... பிசாசினால் அலைக்கழிக்கப்படும் ஹன்சாபேன் குடும்பம் கர்த்தரால் விடுதலை பெற... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 10 பேரும் ஆவிக்குரிய வளர்ச்சியடைய... ஊழியர் ஆசிஷ்பாய் குடும்பத்திற்குத் தேவன் கர்ப்பத்தின் கனி தர... ஜெபியுங்கள்.

25 மகாராஷ்டிரா **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 393**

பங்கான் தளத்தில் தங்கி ஊழியம் செய்வதற்கு ஊழியர் அறை ஆயத்தமானது. அம்பாதாஸ் காம்ளேயின் போதைப் பழக்கம் சுவிசேஷத்தினால் நிறுத்தம் கண்டது. சமாதானத்திற்குத் தூரமாயிருந்த சீதாலால் வீட்டாரை வசனங்கள் இணைந்து வாழ வைத்தது. புதிய ஆலயம் பெற்ற கரத்பாரி கிராம விசுவாசிகள் சுவிசேஷப் பணியில் தீவிரங்கொண்டுள்ளனர், துதியுங்கள்.

நான்டேட் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் தேவை. தேவ பணிக்கு விரோதமாய் எழும்பும் சக்கர்கா கிராம ஜனங்களைக் கர்த்தர் சந்திக்க... சோனேகாவ் தள ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... புதிய விசுவாசிகள் பெருகும் சத்தல்வாடா, சுக்தி ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலம் வாங்கப்பட ஜெபியுங்கள்.

26 தெலுங்கானா **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 394**

தட்டப்பகுடம் ஆலயக் கட்டுமானத்திற்கு எதிர் நின்றவர்களைத் தேவன் சந்தித்தார். 8 பேர் தங்கள் புதுவாழ்வைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர். வேதபாட வகுப்புகள் 4 கிராமங்களில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளன. மொலுகு மாவட்டத்தில் தள ஆய்வுப் பணியின் மூலம் 20 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

குமதால் தளத்தில் வசனங்கேட்டோர் விசுவாச ஜீவியத்தில் வளர்ச்சியடைய... விசுவாசிகள் எண்ணிக்கையில் பெருகும் தாதாதனூர் ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... 9 ஆராதனைக் குழுக்களுக்கு ஒலிபெருக்கி மற்றும் இசைக் கருவிகள் தேவை... முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் 15 இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்கவுள்ளோம்... ஜெபியுங்கள்.

27 ஆந்திரப்பிரதேசம் – சித்தூர் பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 181**

4 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்து, சாட்சி பகர்ந்தனர்.

டிராக்டரில் இருந்து தவறி விழுந்த மது என்பாருக்குக் கர்த்தர் மறுஜீவன் தந்தார். 5 கிராமங்களில் வேதபாட வகுப்புகள் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளன. நற்செய்தி கேட்ட 80 பேரின் உள்ளங்கள் இயேசுவுக்குச் சொந்தமானது, ஸ்தோத்திரம்.

தளங்களில் தொடரும் திறந்தவெளிப் பிரசங்கங்கள் வாயிலாகப் புதிய ஆத்துமாக்கள் சந்திக்கப்பட... புலாகுன்டா தள ஆலயக் கட்டுமானத்தின் நிறைவு பணிகளுக்காக... கொன்டவெங்கபள்ளி ஆராதனைக் குழுவில் பங்கெடுப்போர் தேவ வசனங்களில் ஸ்திரப்பட... துமுகுன்டா, குலகலேடு ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்டும் தேவையைக் காண்கிறோம், ஜெபியுங்கள்.

28 ஆந்திரப் பிரதேசம் – ஜாதாபு பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 312**

பெல்லிடி பணி மையத்தில் நடத்தப்பட்ட சபை மூப்பர்களின் முகாமில் 120 பேர் பங்கேற்று, ஆத்மாதாயப் பணிக்குத் தங்களைச் சமர்ப்பித்தனர். உதயபுரம் தள விசுவாசிகள் தங்கள் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனைக்கு ஆயத்தப்பட்டு வருகின்றனர். பாவ அறிக்கை செய்த 14 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். கொனுகள்ளி கிராம விசுவாசிகள் சுவிசேஷ வேலையில் மிகுந்த ஆர்வங்கொண்டுள்ளனர், ஸ்தோத்திரம்.

கொலிசா, ஜெராட்டி கிராம ஜனங்களின் வாழ்வாதாரம் உயர... ராசபதி தளத்தில் தொடரும் சுவிசேஷக் கூடுகைகளில் ஜாதாபு ஜனங்கள் மறுபிறப்பின் அனுபவம் பெற... ரஸ்தாகுண்டுபாய் பணிமைய விசுவாசிகளுக்கான கன்வென்சன் ஏப்ரல் 1, 2 ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளது. விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் 39 பேர் பங்கெடுக்கின்றனர், ஜெபியுங்கள்.

29 ஆந்திரப் பிரதேசம் – சோரா பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 850**

ஊழிய விரிவாக்கத்திற்காக கன்டுருகாம் ஆலய விசுவாசிகள் தங்கள் நிலங்களை அன்பளிப்பாக்க முன்வந்துள்ளனர். பைகட்டி, பல்லாகட்டி ஆகிய கிராமங்களில் மனந்திரும்புவோரின் எண்ணிக்கை உயருகிறது, ஸ்தோத்திரம். எர்ரமனுகுடா, பொத்தமனுகுடா தளங்கள் புதிய ஆலயங்கள் கண்டுள்ளன. 104 பேர் விசுவாச அறிக்கைக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளனர், துதியுங்கள்.

மகேந்திரபுரம் தளத்தில் நிறைவடைந்த சோரா மேளாவின் பின்தொடர் பணிகளுக்காக... கோதுமை மணிகளான ஊழியர்கள் ஜோகராவ், கூர்மய்யா ஆகியோரின் குடும்பங்கள் கர்த்தரால் ஆறுதலடைய... மன்டசா, மெலியபுட்டி பகுதியில் 300 கிராமங்களில் சுவிசேஷ தீபங்கள் ஏற்றப்பட வேண்டும்... கடந்த ஆறு வருடங்களாக வியாதிப் படுக்கையிலுள்ள ஊழியர் பிரதா என்பாரின் மனைவிக்காக ஜெபியுங்கள்.

30 ஆந்திரப் பிரதேசம் – தெலுங்கு பிராந்தியம் **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 425**

கத்த காமுடுவலசா விசுவாசிகள் ஐக்கியத்தில் 4 குடும்பங்கள் புதிதாக இணைந்துள்ளன. முனக்கய்யவலசாவில் துவங்கப்பட்ட சுவிசேஷப் பணியில் கர்த்தர் 5 பேரை தமது பிள்ளைகளாக மாற்றினார். பாவ அறிக்கைசெய்த 18 பேர் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். வீரசாகரம் பகுதியின் 5 கிராமங்கள் தெருப் பிரசங்கங்கள் வாயிலாக சுவிசேஷம் அறிந்தன, துதியுங்கள்.

பசலபாடுவில் விதைக்கப்பட்ட வசனங்களால் ஆத்துமாக்கள் குணமடைய... 10 பணித்தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானப் பணிகள் இம்மாதத்திற்குள் நிறைவடைய... ரோம்பில்லிவலசாவில் தொடரும் வாலிபர் முகாம்கள் மூலம் முழுநேர ஊழியர்கள் எழும்ப... சர்வே மூலம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் 396 கிராமங்களுக்கு ஊழியர்கள் அனுப்பப்படவேண்டும், ஜெபியுங்கள்.

31 கர்நாடகா **பணிபுரியும் ஊழியக் கிராமங்கள்: 207**

விசுவாசத்தை விட்டு விலகிப்போன சந்தீப் தன்னை இயேசுவுக்கு மறு அர்ப்பணம் செய்துள்ளார். 3 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர். செல்லக்கரே பணி மையத்தில் நடத்தப்பட்ட ஊழியப் பயிற்சி முகாம் 38 ஊழியர்களுக்குப் பயனளித்தது. நெடுங்காலமாய்க் கர்ப்பத்தின் கனிக்காக ஜெபித்த மஞ்சம்மா வீட்டாரைக் குழந்தைப் பாக்கியத்தால் கர்த்தர் ஆசீர்வதித்தார், துதியுங்கள்.

கித்தபுரா தளத்தில் தீ விபத்தில் சிக்கிய லக்ஷ்மியின் காயங்கள் குணமாக... ஜே.ஜே.குண்டா பகுதியில் தொடரும் தேடுவோர் கூட்டங்களில் புதிய ஆத்துமாக்களைத் தேவன் தர... காட்போரல் கிராமத்தில் 16 வருடங்களாகப் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள சரோஜா சுகமடைய... விசுவாசிகள் அதிகரிக்கும் பி.ஜி. கரேயில் ஆலயங்கட்டும் தேவையைக் காண்கிறோம், ஜெபியுங்கள்.

மகிமைக்குள் பிரவேசித்தார்கள்

கன்னியாகுமரி மாவட்டத்திலும், சென்னையிலும் ஒருங்கிணைப்பாளராக விஷ்வவாணி ஊழியத்தின் மூலம் கிறிஸ்துவுக்காய் பணிபுரிந்த முன்னாள் ஊழியர் திரு. வில்லியம்ஸ் அவர்கள் 20.01.2023 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள்.

சென்னை - அம்பத்தூர் பகுதியிலிருந்து ஊழியர்களை ஆதரித்தவர்களும், விஷ்வவாணி ஊழியங்களை வெகுவாய் நேசித்தவர்களுமான திரு. குமாரதாஸ் (வயது 82) அவர்கள் 21.01.2023 அன்று தேவராஜ்யம் பிரவேசித்தார்கள். கடந்த ஆண்டில் கர்த்தரின் ராஜ்யம் சேர்ந்த திருமதி. ஓமனா குமாரதாஸ் அவர்களின் ஊழிய ஈடுபாட்டையும் அதிக நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

சென்னை - அயனாவரம் பகுதியிலிருந்து சுவிசேஷப் பணிக்கு அதிக ஆதரவு அளித்துவந்த பணிப்பங்காளர் திரு. ஆர்தர் (வயது 90) அவர்கள் 27.01.2023 அன்று கர்த்தரின் ராஜ்யம் பிரவேசித்தார்கள்.

தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம் S. கைலாசபுரம் சேகர குருவானவர் அருள்திரு. T O M கோல்டுவின் ஐயா அவர்கள் 08.02.2023 அன்று தேவராஜ்யம் பிரவேசித்தார்கள். ஆலயத் திருப்பணிவிடைகளிலும், விஷ்வவாணி பணி மூலம் தூர இடங்களுக்குச் சுவிசேஷம் அனுப்புவதிலும் இயேசுவுக்கு மகிமைசேர்த்த அன்புப்போதகர் ஐயாவின் ஊழியக் காலங்களை நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் தேவ ஊழியங்களை வெகுவாய் நேசித்து ஆதரித்து வரும் திரு. மயிலேறி அவர்களது அன்புத் தாயார் திருமதி. V. அமிர்தம் அம்மாள் (வயது 85) அவர்கள் 10.02.2023 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள்.

தங்களுக்கு அருமையானவர்களை இழந்து, தேவ ஆறுதலுக்காகவும் சமாதானத்திற்காகவும் ஏங்கும் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சகல ஆறுதலும் கர்த்தரால் உண்டாகும்படி ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.

விஷ்வவாணி ஊழிய விபரங்கட்கு
தொடர்புகொள்ளுங்கள்

தென் தமிழகம்:
திருநெல்வேலி & தென்காசி:
9442006618. 18-B, டேனியல் தாமஸ் தெரு, பாளையங்கோட்டை-2.
நாகர்கோவில்: 9444343180.
தூத்துக்குடி: 9677796052.

மத்திய தமிழகம்: 29A, பிலிப்ஸ் கார்டன், பெத்தானி நகர், விளாச்சேரி ரோடு, பசுமலை, மதுரை-625004.
மதுரை: 0452-2380443, 9865352272.
திண்டுக்கல்: 9788427036
விருதுநகர்: 9659803075.
திருச்சி: 26A, எட்டுப் பட்டறை காம்பவுண்டு, திரு.வி.க. நகர், புத்தூர், திருச்சி-620017 ✆ 9488804685.
தஞ்சாவூர்: 9, கிருபை இல்லம், R.B. ரோடு, மிஷன் தெரு, தஞ்சாவூர் - 613001. ✆ 9443586692

மேற்கு தமிழகம்: கோயம்புத்தூர்:
45, அன்சாரி வீதி, ராம் நகர், கோயம்புத்தூர்-641009
✆ 0422-2232504. ✆9442006614.
சேலம்: ✆ 9789758300.

வட தமிழகம்:
சென்னை – வேளச்சேரி:
தேவா-சுசி இல்லம், 13/9, 7வது மெயின் ரோடு, தண்டீஸ்வரம் நகர், வேளச்சேரி, சென்னை-600042.
Ph: 9600888375.
சென்னை-முகப்பேர்:
LIG 502, முகப்பேர் ஏரித் திட்டம் 8வது தெரு, முகப்பேர், சென்னை-600037. Ph: 9443004640.
சென்னை – பெரும்பாக்கம்:
5/225-A வீரமா முனிவர் தெரு, பசும்பொன் நகர், பெரும்பாக்கம், சென்னை-600100. ✆9003609874.
விழுப்புரம் & பாண்டிச்சேரி:
✆9443997515.
வேலூர்: 9/513, 16வது தெரு, Phase - 1, சத்துவாச்சாரி, வேலூர் - 632009.
✆9600138998

பிற மாநில அலுவலகங்கள்:
புது டெல்லி: 011-26365928, 9910762447.
பெங்களூரு: 080-23333509.
மும்பை: 9890223355, 9029872213.

நடப்புச் செய்திகள்

வியாழன் கிரகம்தான் சூரியனின் குடும்பத்தில் மிகப்பெரிய கிரகம். இதுவரை சனி கிரகத்தில் அதிகளவு நிலவுகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதிவந்தனர். சனிக்கோளைச் சுற்றிலும் இதுவரை 82 நிலவுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மறுபுறம், வியாழனுக்கு 80 நிலவுகள் இருப்பதாக நம்பப்பட்டது. இருப்பினும், சமீபத்திய கண்டுபிடிப்பு வியாழன் மேலும் 12 நிலவுகளைக் கொண்டுள்ளது என்கிறது. இதன் மூலம், வியாழனின் நிலவுகளின் எண்ணிக்கை 92 ஆக அதிகரித்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட 12 நிலவுகளில், ஒன்பது தொலைவில் உள்ளன; இந்த ஒன்பது நிலவுகளும் வியாழனைச் சுற்றி வர 550 நாட்கள் எடுத்துக் கொள்கின்றன!

"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்". யோபு 5:9

நமது பூமியிலுள்ள சதுப்பு நிலங்கள்தான் பல்லுயிர் பெருக்கத்தை ஆதரித்து, இயற்கை சுழற்சிகளை பராமரிப்பதற்குப் பேருதவிபுரிகின்றன. நீர் ஆதாரங்களை நிரப்புவதுடன் கடற்கரைகளையும் அவை பாதுகாக்கின்றன. இந்தியப் புவியியல் பகுதியில் 4.7% சதுப்பு நிலங்கள். இன்று 30% இந்திய சதுப்பு நிலம் அழிந்துவிட்டது. மேலும் உலகளவில் 35% சதுப்பு நிலங்கள் இன்று இல்லை.

மக்கள்தொகை வளர்ச்சியுடன், நில அரிப்பு, நிலச்சரிவு போன்ற காரணங்களால் சதுப்பு நிலங்கள் குறைந்துகொண்டே போகிறது. உலக சதுப்பு நில தினத்தை குறிக்கும் முன்மொழிவு 1997ல் உருவாக்கப்பட்ட போதிலும், 2021 பிப்ரவரி 2ல் உலக சதுப்பு நில தினம் என்ற அநுசரிப்பு ஆரம்பித்தது.

சத்தீஸ்கடு, மகாராஷ்டிரா, குஜராத், தெலுங்கானா, ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் பரலோக மன்னாவைப் பெற்று மகிழும் ஜனங்கள் பாக்கியவான்கள்; அவர்கள் நடுவில் எடு ஆலயங்கள் எழும்ப பரிசுத்தாவியானவர் ஏவியருளிய விசுவாசக் குடும்பங்கள் கர்த்தரின் பரிபூரண ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரவான்கள்!

01 KUNOOR, TELANGANA - 15.01.2023

02 KHARADBARI, MAHARASHTRA - 21.01.2023

03 GUNAKALLU, A.P. - 22.01.2023

04 YERRAMANUGUDA, A.P. - 29.01.2023

05 BODDAMANUGUDA, A.P. - 29.01.2023

06 SARSIWA, CHHATTISGARH - 29.01.2023

07 MOTIDABAS, GUJARAT - 09.02.2023

08 GORATI, A.P. - 10.02.2023

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. HQ/SD/182/2021-2023 - TAMIL | DATE OF PUBLICATION 20.02.2023
LICENSED TO POST WITHOUT PREPAYMENT - PMG/TS/HQR/SC-02/WPP/2021-2023
Return Requested: VISHWAVANI SAMARPAN
1-10-28/247, Anandapuram,
ECIL Post, Hyderabad-500062.

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE
Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society (Regn. No.17871 of 1987) and printed at CAXTON Offset Pvt. Ltd., 11-5-416/3, Red Hills, HYD-04. and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62. POSTING DATE: 23.02.2023. EDITOR: P. SELVARAJ.